சுபானு ௵ சித்திரை ௴ விலை அணா 4 APRIL 1943

எஸ். ஸத்தியமூர்த்தி.

தவறாமல் உபயோகித்தால் குழந்தைகளை "அழுக்கு அபாய"த்திலிருந்து காப்பாற்றும் பிரக்கியாதி பெற்ற இந்த சோப் நமக்குப் பரிசயமாயுள்ள அட்டைப் பெட்டியில் இப்பொழுது வருவதில்லை. ஒரு பிரத்தியேகமான மெழுகு காகிதத்தில் சுற்றப்பட்டு விற்கப்படுகிறது. ஆனால் உள்ளிருக்கும் சோப் அதே லைப்பாய்தான். அது விஷக் கிருமி நாசக சக்தியும், ஆரோக்கியத்தை ரக்ஷிக்கும் தன்மையும் கூடியது. ஆகையால்தான் அது பிரசித்திப் பெற்றது.

லைப்பாய் நல்ல ஸோப்பைக் காட்டிலும் சிறந்தது அதுஒருநல்லவழக்கம்

L. 47-33 TM — LEVER BROTHERS (INDIA) LIMITED

ஆசிரியர்:
கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்:
43, மஹாதானத்தெரு, மாயவரம்.

மாத வெளியீடு

ஆருவாகனனே ஆருலம் யாவும்
போக உன்பதமே போற்றினேன் அருளே — "கிரன்"

மாலை 9	APRIL 1943 :: சுபானுஷு சித்திரைமீ	முத்து 4

பொருளடக்கம்

			பக்கம்
1	போகிற போக்கில்	கா. சி. வேங்கடரமணி	98
2	எஸ். ஸத்தியமூர்த்தி	"	100
3	சுபானு	'கிரன்'	102
4	தெய்வச்செயல்	வி. ஸத்தியவதி	103
5	ஆவச்யகக் கல்வி	டாக்டர் டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம்.ஏ., எல்.ஐ.எம்.	105
6	வங்க சமூகம்	வே. ரா. சுந்தரராமன், எம்.ஏ.	109
7	சிறுவர் பகுதி:—		
	பொறுமை—பயின்ற முனிவர்	ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.	118
	'ஸம்ஸர்கஜாதோஷ குணபவந்தி'	கே. எஸ். சூர்யநாராயண சர்மா	119
8	உஸ்தாத் மஜ்லிஸ் கான்	எஸ். குஞ்சிதபாதம்	122

"பாரதமணி"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.

இன்றயதினம் தமிழர்களுக்குப் புது வருஷம் பிறக்கிறது. குழந்தைகளுக்கு தீபாவளிக்குப் புது ஆடைபோல், பாரத மணிக்கும் இதுவரையில் ஒவ்வொரு வருஷப் பிறப்பிற்கும் ஒரு விசேஷமலர் உண்டு. ஆனால் இப்பொழுது, நமது நாட்டில் எல்லா சாமான்களுக்கும் ஏராளமாய் உற்பத்தி யிருந்தாலும், பஞ்சம் உலவி வரும்பொழுது தீபாவளிக்குப் புது உடை ஏது? வருஷப் பிறப்பிற்கு விசேஷ மலர் ஏது? உயிர் இருந்தால் போதும்!

* * * *

'செய்வன திருந்தச்செய்' என்ற உத்தம மொழியைக் கொள்கைகொண்டும் பாரத மணியைப் பல காரணங்களால் இதுவரையில் திருந்தச் செய்ய இயலாதவனாய் இருக்கிறேன். இருந்தும் அதன் உயிரையாவது, இந்த யுத்த நெருக்கடி தீரும் வரையில், காப்பாற்றிவைத்தால் பிறகு ஒரு வேளை பாரதமணிக்கு நல்ல காலம் பிறந்தாலும் பிறக்கலாமே என்ற கொள்கையைக் கைக்கொண்டு மிக்கக் கஷ்டத்துடன் "பாரதமணி"யை நடத்தி வருகிறேன்.

* * *

கொள்கை இதுதான்: பஞ்சகாலத்தில்தான் அன்னதானம் மிக்க விசேஷம் —ஒரு பெரிய தர்மம். அதுபோல இந்த யுத்த நெருக்கடியில் சாந்தத்திற்கும், அறிவுக்கும் ஏற்பட்டிருக்கும் பஞ்ச காலத்தில்தான் அறிவைப் போற்ற முயலும் பத்திரிகைகளைக் கஷ்டத்தைப்பார்க்காமல் விடாமுயர்ச்சியுடன் நடத்த வேண்டியது ஓர் விசேஷ தர்மம். கஷ்டங்களைக்கண்டு மயங்கக்கூடாது. அவைகளே ஜெயத்திற்கு வேண்டிய குணங்களை அளிக்குமென்று கருதவேண்டும். இக் கொள்கைகளைக் கைக்கொண்டுதான் நஷ்டத்தையும், சிரமத்தையும் பொருட்படுத்தாமல் பாரதமணியை நடத்திவருகிறேன்.

இந்த ஐந்து வருஷம் இப்படிப் பாடுபட்டும், தன் ஓட்டத்தில் ஓடக்கூடிய அளவுகூட வெள்ளம் இன்னும் பாரத மணிக்குப் பெருகவில்லையே என்பது என் பாக்கியக் குறைவுதான். என் தபஸ் குறைவுதான் காரணம். விடாமுயற்சியும், உழைப்பும்தான் இந்தக் குறையைத் தீர்க்கும்.

பூமியில் தண்ணீர் இல்லை என்பது உண்டோ? கடப்பை ஜில்லாவிலும் கிணறு உண்டு. வேண்டிய ஆழம் வெட்டினால் நீர்கிடைக்கும். காவேரி தீரத்தில் அன்பின் ஆதரவைப் பெறவேண்டுமென்றால் கடப்பை ஜில்லாவில் கிணறு வெட்டி ஜலம் காணவேண்டிய ஆழம் இங்கே தோண்டவேண்டும். இதை உள்ளத்தில் வைத்துக்கொண்டுதான் நம்பிக்கை அழியாமல் பாடுபடுகிறேன்.

* * *

பாரத மணியின் ஓர் முக்கியமான நோக்கத்தை மறுபடியும் நான் நண்பர்களுக்குத் தெரிவிக்க முயலுகிறேன். விஷயங்களைப் பிரித்து எடுத்துச்சொல்லி அறிவைப் போற்றும் உரைகளைத்தான் பாரதமணி நமது நாட்டில் பரப்ப வேண்டும். அப்படிச் செய்தால்தான் நம்முடைய அரசியல் வாழ்வில் முன்னேற்றமடையலாம். தற்கால நிலைமை

யில் நம்மில் படித்தவர்கள்கூட, ஒரு விஷயத்தையும் பூராவாகவாவது, நேராக வாவது, 'மூக்கு, நாக்கு' வைக்காமல் தெரிந்துகொள்வதில்லை. நமது கல்வித் திட்டமே இதற்கு முக்கிய காரணம். அப்படித் தெரிந்துகொண்டாலும் அதை செயல் ரூபமாக மாற்றும்பொழுது முழு உழைப்புடனும் பக்தியுடனும் திருந்தச் செய்வதில்லை.

நவீன நாகரீகத்தில் இந்தக் குணம் பொருந்தாவிட்டால் ஒருவிதமான நிர்மாணவேலையும் செய்யமுடியாது. ஆகையால் சுயராஜ்யத்திற்கு இக் குணமே அடிப்படையாகும். விஷயங்களைச் சரியாக,பிறந்தாற்போல்உணரும்கண்வேண்டும். அதைவெளியிடும்பொழுதும்'மூக்கு, நாக்கு' வைத்து, 'கைச்சரக்கு'ச்சேர்த்து வெளியிடும் ஆசையும் ஒழியவேண்டும். ஏனென்றால் இது கவிதையுமல்ல; உண்மையான யோகசாதனமுமல்ல.

* * *

கடைசியாக என் நண்பர்களுக்கு மறுபடியும் புதுவருஷ வேண்டுகோள் ஒன்று. காகிதத்தின் விலை ஆறுபங்கு அதிகரித்தும், இதரச் செலவுகள் கூடியும் பாரதமணியின் வருட சந்தா ரூபாய் மூன்றை அதிகரிக்கவில்லை. ஐந்து வருஷம் முன்பு நான் பாரதமணி துவக்கும் சமயத்தில், பாரதமணியைச் சந்தாவே குறிப்பிடாத ஓர் பத்திரிகையாக நடத்த வேண்டுமென்ற எண்ணம் என் மனதில் குடிகொண்டிருந்தது. அவ்வெண்ணத்தைப் பல காரணங்களால் நிறைவேற்ற முடியவில்லை. அதை ஒருவிதமாக இப்பொழுது நடத்தலாம் என்று எண்ணுகிறேன்.

'ஓர் அணிப்பிள்ளையின் தொண்டையாவது பாரதமணி இந்த ஐந்து வருஷ காலமாகச் செய்துவருகிறது' என்ற எண்ணம் கொண்ட நண்பர்களுக்கு குறிப்பிட்ட சந்தாவே பாரதமணிக்குக் கிடையாது. அவர்கள் தாங்கள் இஷ்டப்பட்ட சந்தாவை வருஷா வருஷம் அனுப்பும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். பாரத மணி நீடித்து நடந்து வரும் பொறுப்பு அவர்களுடையதே.

நான் திட்டம் போட்டபடி பாரத மணியை இதுவரையில் நடத்த முடியவில்லை. ஏன் என்றால் அதற்கு வேண்டிய ஆதரவு எனக்கு இன்னும் கிடைக்கவில்லை. விடாமுயற்சியுடன் பாரத மணியை நடத்திவந்தால் ஒரு நாளாவது எனக்கு அந்த ஆதரவு கிடைக்குமென்ற நம்பிக்கை என்னை இன்னும் தூண்டி வருவதால், நான் இன்னும் மனம் சலிக்காமல் அம்பாள் சந்நிதியில் எரியும் விளக்கின் திரியைக் கையிலகப்பட்ட துரும்பால் தூண்டிக்கொண்டு வருகிறேன். ஆனால் விளக்கில் எண்ணை குறைந்துகொண்டே வருகிறதே என்று சில சமயங்களில் என்மனம் கிலேச மடைகின்றது.

மணி.



எஸ். ஸத்தியமூர்த்தி

கா. சி. வேங்கடரமணி

எஸ். ஸத்தியமூர்த்தி காலம் சென்றுவிட்டார். வெண்ணெய் பூத்துக் குவியும் சமயத்தில் மத்து முறிந்துபோய்விட்டதே! ஸத்தியமூர்த்தியின் பாக்கியக் குறைவு. நமது தேசத்தின் அதிர்ஷ்டக் குறைவு. காலத்தின் கோளாறு.

தேசத் தொண்டிலேயே இளம் பிராயம் முதற்கொண்டு ஈடுபட்டு வக்கீல் தொழிலையும் இதற்காகத் தியாகம் செய்து, ஒய்வற்ற உழைப்பால் தேக சௌக்கியத்தையும் இழந்து, வறுமையின் கொடுமையையும் ஒருவாறு அநுபவித்து நாட்டிற்குக் கோபுரஉயரத்தொண்டைப் புரிந்து அழியாத வழிகாட்டியாய் தன் உயிரையும் பலன் கைக்கு எட்டும் காலத்தில் இழந்தார். ஆனால் எப்பொழுதும் அழியாப் பெயரை நாட்டில் நிலை நாட்டிவிட்டார். நாம் ஒருக்காலும் அவர் தொண்டை மறக்கமுடியாது. கடலைப்போல் ஒய்வில்லாத் தொண்டு.

2

ஸத்தியமூர்த்தியை நான் முப்பது வருஷகாலமாய் நன்கு அறிவேன் முதல் முதலில் கிருஸ்டியன் காலேஜில் நான் ஜூனியர் இண்டர்மீடியட் வகுப்பில் மாணவனுயிருக்கும்பொழுது அவர் அந்தக் காலேஜில் சரித்திர டியூடராக இருந்தார். அப்பொழுதே நல்ல பிரசித்தி. பேச்சுவன்மையும் சுறுசுறுப்பும் வாய்ந்தவர். பயமறியார்.

ஒருநாள் புரொபஸர் மாக்பெயிலுக்குப் பதிலாக எங்கள் வகுப்பிற்குப் பாடம் போதிக்க ஒருமணிநேரம் வந்தார். ஸத்தியமூர்த்தி அய்யர் வரப்போகிறுர் என்று காலையிலேயே குதூகலமாயிருந்தது. கரகோஷமும், 'காலரி' கோஷமும், டாக்டர் ஸ்கின்னருக்குக்கூட அடங்காமல் அமர்க்களமாயிருந்தது. ஸத்தியமூர்த்தி வந்து வாயைத் திறந்தாரோ இல்லையோ, நிசப்தமாய் ஆகிவிட்டது. வகுப்பிலுள்ள மூன்னூறு இளைஞர்களையும் அடக்கி யாண்டு ஐப்பசிமாத மழைபோல் ஒருமணிநேரம் சொற்பொழிவு ஆற்றினர். இதுதான் அவரை முதன் முதல் நான் கண்ட ஸம்பவம்.

இதற்கு முப்பத்திமூன்று வருஷம் கழித்துக்கடைசியாக ஸத்தியமூர்த்தியை டில்லியில் ஸர் ஸ்டாபோர்ட் கிரிப்ஸ் வந்திருக்கும் ஸமயத்தில் தினசரி ஸந்தித்தேன். பிரஸ்கான்பரன்சுக்கும், பிர்லா ஹௌஸுக்கும், ஸத்தியமூர்த்தி ஜாகைக்குமாகவே அந்த அரசியல் நெருக்கடி சமயத்தில் காலத்தைக் கழித்தேன். ஸத்தியமூர்த்தியின் எல்லையில்லாத தேசபக்தியையும், நிர்மாணவேலையில் அவருக்கு இருந்த ஊக்கத்தையும் கண்டு களித்தேன்.

இந்தஇரண்டு சம்பவங்களுக்கு நடுவேயுள்ள முப்பத்திமூன்று வருஷகாலத்தில் அவரை அனேகமாய் தினசரி, ஹைகோர்ட்டிலாவது அரசியல் கூட்டங்களிலாவது, இன்னும் இதர மேடைகளிலாவது நான் ஸந்தித்து ஸம்பாஷிக்காத நாள் கிடையாது. இரண்டு ஸர்வகலாசாலைகளிலும் அவருடன் சேர்ந்து உழைத்திருக்கிறேன்.

என்ன தெளிவான புத்தி! சுறுசுறுப்பான பேச்சு. நேரிட்ட வழக்கு. உதார குணம். பொது அறிவை ஊட்டிப் பார்க்கும் பார்வை. வழவழப்புக் கிடையாது. தீர்மானமான நோக்கம். தெளிவான பேச்சு. மழைபோலொத்த புழு

தியை அடக்கும் பிறர் மெச்சும் பேச்சு. இவரைப்போலொத்த சொல்லிலும் செயலிலும் தேட்டை யடைந்த உத்தமர் சிலரே. கோடியில் ஒரு பிறப் புத்தான். அனேக வருஷங்களுக்கு ஒரு நாட்டிற்கு இப்பேற்பட்ட பிறப்பு ஒருவர்தான்.

3

நமது தேசத்திற்குப் புத்துயிர் அளிக்கும் திட்டத்திற்கு ஸத்யமூர்த்தி போலொத்தவர் கிடைப்பது அரிது. ஆனால் அவரை நாம் காலத்தின் கோளாறினாலும், நம்முடைய புத்திக் குறைவாலும், உண்மையில் பூர்ணமாக உபயோகப்படுத்த முடியவில்லை. ஆற்று வெள்ளம் வயலுக்குப் போகாமல் கடலுக்கே சென்று வீணாகிவிட்டது. சுப்ரமண்ய பாரதியாரை அவர் வாழ் நாளில் பட்டினி போட்டுக்கொண்டு அவர் காலம்சென்ற பிறகு, காலையும் மாலையும் அவரை நாம் இப்பொழுது பஜனை செய்வதுபோல், ஸத்யமூர்த்தியையும் நாம் அவர் வாழ்நாளில் அன்புடன் அவரைக் கவனித்து வேண்டிய ஆதரவு செலுத்தவில்லை. தற்கால அரசியலில் எந்த நாட்டை எடுத்தாலும், எங்கு பார்த்தாலும், பணமுடிப்பின் வெற்றியே வெற்றியாகக் கொண்டாடப்படுகிறது. பாங்கில் பணமில்லாத குறையைத்தவிர ஸத்ய மூர்த்தியிடம் வேறு ஒரு குறையும் இருந்ததாக எனக்குத் தெரியவில்லை. இந்தக் குறையிலிருந்து ஏற்படும் பலக் குறைவால்தான் அவர் வெற்றியுடன் நின்று சில முக்கிய காரியங்களில் போரிட முடியவில்லை. இந்த நெருக்கடியில்கூட அவர் தைர்யலக்ஷ்மியைக் கைவிடவில்லை.

பேசும் திறமை மாத்திரமல்ல; செயலிலும் சூரர்—பூண்டி ஏரியே இதற்குச் சாக்ஷி: இவ்விரண்டும் சேர்ந்து அமைவது அரிது.

நிர்மாணவேலையில் அவருக்கு ஓர் அபூர்வமான சக்தி. நமது நாட்டில் இது பல தலைவர்களுக்குக் கிடையாது. அவர் மனது, தன் வழியையே பற்றிப்போகும் பிடிவாதத் தொடர்பு உள்ள மனது (Single track mind) அல்ல. பிறருக்கும் இடங்கொடுத்துப் பலரை அநுஸரிக்கும் புத்தி (Committee mind). எல்லா விஷயங்களிலும் நியாயத்தை ஒட்டியே பார்க்கும் பார்வை. கம்பீரமான நோக்கம். நான்குபெயர்களுடன் சேர்ந்து உழைக்கும் தன்மை. காங்கிரஸ் கக்ஷியில் எந்நாளும் மாறாத பற்றுள்ளவர்.

இவ்வளவு குணம் வாய்ந்த ஸ்த்ய மூர்த்திக்குச் சென்னையில் மந்திரிஸ்தானமாவது அவச்யம் கிடைத்திருக்க வேண்டியது. டில்லியிலாவது சமீபத்தில் அரசியல் குழப்பம்தீர்ந்ததும் அவருக்கு மந்திரி பதவி கிடைக்குமென்று எதிர்பார்த்திருந்தேன்—தேசத்தின் லாபத்தையே நோக்கி. நாட்டிற்குப் பாக்கியமில்லை.

4

சலிப்பில்லாத உழைப்பால் தன் தேசத்தையே தேசத்திற்குச் செருப்பாகத் தைத்துப்போட்ட ஸத்யமூர்த்தியை நாம் ஒருக்காலும் மறக்கமுடியாது. நமது கடமைதான் இப்பொழுது குவிந்து நிற்கிறது. இவர் ஞாபகார்த்தமாக ஐந்து லக்ஷ ரூபாய் ஓர் நிதி சேர்த்து இவர் பாடுபட்டிருக்கும் பல துறைகளில் ஒவ்வொன்றிலும் ஒரு தர்ம ஸ்தாபனத்தை இவர் பெயரால் ஏற்பாடு செய்யவேண்டும். அரசியலில் உழைக்கும் தொண்டர்களுக்கு ஒரு ஜீவன நிதியையும், இவர் பெயரால் ஸ்தாபனம் செய்வதும் மிகப் பொருத்தமாயிருக்கும்.

சுபானு

'கீரன்'

அன்னையே! ஸ்ரீ பராசக்தி! உன் பொன்னடிகளுக்கு நமஸ்காரம். பாரத மாதா! உனக்கு மங்களம்! பல்வேறு ரூபங்களோடும் ரூபமே இல்லாமலும், ஸகல குணங்களுக்கும் இருப்பிடமாகவும் குணதோஷமே இல்லாமலும், அகண்ட உலகத்தைப்படைத்து அதனுடன் ஒட்டியும் ஒட்டாமலும், எக்காலத்தும் எங்கும் வியாபித்துத் தத்துவப் பொருளாய்த் தனித்துநிற்கும் தெய்வமே! உன் பாத கமலங்களுக்குப் பல கோடி நமஸ்காரங்கள்.

பரம்பொருளே! உன் ஆக்ஞையின் படிப் புதுநாள் பிறக்கிறது. அந்த நாள் தொடரை '**சுபானு**' என்று அழைக்கின்றனர். சுபிட்சத்தின், சுகத்தின் சூசகமாகத் துவனிக்கும் 'சு' என்கிற மங்களாட்சரத்தை முன்னதாகக் கொண்டுள்ள சுபானுவில் பாரபட்சமற்ற பரிசுத்த தெய்வமாகிய ஆதித்தனின் நாமாக்களுள் ஒன்றாகிய 'பானு' இணைந்திருப்பதால் இது உலகத்திற்கு **சுபபானு** வருஷமாகட்டும்! பாரபட்சம் அழியட்டும்! புனிதமான ரவியின் கண்கடாட்சத்தால்—கிரணஸ்பரிசத்தால்—இன்றையிலிருந்து மக்களிடையே சாந்தி நிலவட்டும்! பயங்கரமான காமக்குரோதாதிகள், அவைகளால் நிகழும் தீச்செயல்கள் அனைத்தும் அழிந்து சமரச சன்மார்க்கங்கள் நிறைந்து உலகம் புதுமை பெற்று விளங்கட்டும்! பொறுமை நிறைந்த பாரதமாதாவின் சஞ்சலம் நீங்க அவளது குழந்தைகள் க்ஷேமத்தை அடையட்டும்! அதைக்கண்டு மாதா மனமகிழட்டும்! தமிழ்த்தாய்களிக்கட்டும்! ஆங்காங்குள்ள பிறமொழிகளும் வளரட்டும்! ஏ சுபானு! உன் வரவு நல் வரவாகுக! ஸ்ரீ பராசக்தி! அனைத்திற்கும் நீ யருள்வாய்!

104-ம் பக்கத் தொடர்ச்சி

க்கு வேலையும் போய் அரைவயிற்றுக் கஞ்சிக்குக் கூட வழியில்லாமல் இப்பொழுது திண்டாடுகிறேன். என்கெட்ட குணத்தாலும், லஞ்சம் வாங்கியதாலும் என்னை உத்தியோகத்திலிருந்து சர்க்கார் துரத்திவிட்டார்கள்". எனத் தன் வரலாற்றைக் கூறினன். வத்ஸலாவின் வேண்டுகோளின் பேரில் அவளுடன் தர்ம பாடசாலைக்குப் புறப்பட்டான்.

இவர்கள் தர்மசாலையை அடைந்ததும் நேரே தர்மியிடம் சென்றுள். பாவம்! அம் முதியவள் அதிக மார்வலியால் புரண்டு கொண்டும், பக்கத்தில் டாக்டர் இருப்பதையும் கவனித்த வத்சலா திடுக்கிட்டு தர்மிக்கருகில் ஓடினள். இவளைக்கண்ட தர்மி அன்புடன் வரவேற்று, "குழந்தாய் நான் இனிமேல் பிழைக்கமாட்டேன். உன் வரவைத்தான் ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன். எனக்குப் பிறகு நீதான் இத்தர்மசாலையை நடத்த வேண்டும்" என்று கேட்டுக் கொண்டாள். நீர்நிறைந்த கண்களுடன் ஆமோதித்தாள் வத்ஸலா. இதற்குள், அவ்விடம் வந்த பலராமனைத் தர்மிக்கு யார் என்பதைத் தெரிவித்து, அவன் வரலாற்றையும் கூறினள். தர்மி இருவருடைய கரங்களைச் சேர்த்து, நல்ல ஒழுக்கத்துடன் இருக்கும்படி தன் ஆசீர்வாதங்களால் திருமணம் செய்வித்து ஸந்தோஷத்துடன் கண்ணை மூடிக்கொண்டாள்.

வத்ஸலா தர்மசாலைக்கு தலைவியாகி எல்லாவற்றையும் வெகு சிறப்புடன் கவனிக்கத் தொடங்கினள். அடிக்கடி தம்பதிகளிருவரும் கிராமசேவையிலீடுபட்டு அனாதைகளை ஆதரித்துவந்தார்கள்.

இவர்களின் வாழ்க்கைக்கேயல்லாது, அனாதைகளுக்கும் ஓர் ஜோதியாக விளங்கினர்களென்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

தெய்வச்செயல்

ஸி. ஸத்யவதி—ஸெகந்தராபாத்

ப்ரதி வருஷமும் தவறுமல் ஹிந்து தேசத்தை, கிராமங்களிலும், பட்டணங்களிலும் விஜயம்செய்து, கணக்கில்லாத ஜனங்களைக் கொள்ளைக்கொண்டு போகும் மசூசிகத்தால், அனுதாவாகச் செய்யப்படும் ஜனகோடியைச் சேர்ந்தவளே நம் கதாநாயகி சிறிய பெண்ணுன வத்ஸலா.

தகப்பனுர் சிவபூஷணம் பிள்ளை, திருநெல்வேலியில் சிறந்த சைவகுலத்தில் உதித்தவர். அறுபது ரூபாய் சம்பளத்தில், தன் ஒரே பெண்ணுன வத்ஸலாவுடனும், மனைவியுடனும் அம்பாசமுத்திரத்தில் ஜீவித்துவந்தார்.

இவர்களுடன் நம்பிக்கையுள்ள ஓர் கிழவியும் சகாயத்திற்கு இருந்தாள். இவர் சம்பாதித்துக்கொண்டிருக்கையில், பந்துக்கள் பலபேர் இவரை நாடிச் சகாயத்தைப் பெற்றுக்கொண்டனர்.

திடீரென்று தோன்றிய, மசூசிகத்தால் தம்பதிகளிருவரும் ஒருவர்பின் ஒருவருக, இம் மாயவுலகத்திலிருந்து மறைந்துவிட்டனர். இந்த எட்டு வயதான சிறுமி, திக்கில்லாமல் தவிப்பதைப் பார்த்த கிழவி, பந்துக்களென்று இவர்களை ஆச்ரயித்தவர்களுக்குத் தெரியபப்படுத்தியும் அவர்கள் 'என்' என்றுகூடக் கேழ்க்கவில்லை.

சினேகிதர்களின் உதவியால், அந்த அனுதைப்பெண்ணைத் தரித்ர தசையில் காப்பாற்றிவந்தாள் கிழவி. இப்படியே நாட்கள் பல மறைந்துவிட்டன. பெண்ணுக்கும், யுக்த வயது வந்தபடியால் இவள் கல்யாணத்தைப்பற்றிச் சிந்திக்கத் தொடங்கினுள். அப்பெண்ணின் பந்துக்கள் கிட்ட நாடவில்லை. இவளிடமோ திரவ்யம் கிடையாது. இதுவே பெரிய கவலையாய்விட்டது. இவள் சிந்தனைக்கு முடிவு ஏற்படுவதற்குள் இவளுக்கே முடிவு ஏற்பட்டது. மார் அடைப்பில் மடிந்தாள் கிழவி.

கிழவியை இழந்த வத்ஸலா இரண்டு நாள் வரையிலும் அன்ன ஆஹாரமேயில்லாமல் தவித்தாள். கடைசியில், தன் தகப்பனுரின் சிநேகிதரிடம் அடைக்கலம் புகலாமென்று, தம் குடிசையிலிருந்து எப்பொழுதுமே கிழவியில்லாமல் வெளிக்கிளம்பாத அச் சிறுமி, பயத்துடனே புறப்பட்டாள். இப்படி இவள் மெல்ல மெல்ல நடப்பதையும், பயப்படுவதையும் பார்த்த மற்றவர்களுக்கு 'இவள் ஓர் குற்றவாளியோ' என்று சந்தேகப்பட ஹேதுவாயிற்று.

இவள் செல்லும் வழியில்தான் இருக்கிறுன் போலீஸ் இன்ஸ்பெக்டர் பலராமன். இவன் பேரைக் கேட்டாலே அழும் குழந்தையும் வாயை மூடிவிடும். இவனைக் கண்டால் ஆண், பெண் எல்லோருக்குமே பயம்தான். அவ்வளவு போக்கிரியும் பொல்லாதவனுமாக விளங்கினுன்.

வத்ஸலா பயத்துடன் செல்லுவது சந்தேகித்த பலராமன் வீட்டிலிருக்கும் இரண்டு போலீஸ்காரர்களின் கண்களைக் கவர்ந்தது. உடனே இருவரும் அவளை மிரட்டிக்கொண்டிருக்கும் சமயத்தில், பலராமன் அவளை அழைத்து வரும்படி ஆக்ஞாபித்தான். போலீஸ் தோரணையில் அவளைக் கேட்டதில் தன் சரித்திரத்தைச் சொன்னுள். துர் எண்ணம்கொண்ட அவன் 'நீ என்னுடன் இருந்துவிடு; நான் உன்னைக் காப்பாற்றுகிறேனென்'ன்று கூறினுன். வத்ஸலா ஒன்றும் புரியாமல், பயத்துடன் நிற்பதைக் கண்ட அவன், "நானும் உங்கள் பிள்ளை ஜாதியைச் சேர்ந்தவன்தான். உன்னை நான் மணந்துகொள்ளுகிறேன். இனி

மேல் உனக்கு ஓர் கஷ்டமும் கிடையாது" என்று தெரிவித்தான். உலக அநுபவமே இல்லாத அந்தச் சிறு பெண் இதற்கு இசைந்துவிட்டாள்.

மனம் எப்பொழுதும் ஓர்நிலையிலிருப்பதில்லை. காட்டில் க்ரூரமான மிருகங்கள் எப்படி இஷ்டம்போல் திரிகிறதோ அதைப்போல் மனமான வனத்தில் பலவித எண்ணங்கள் திரிகின்றன—பாவம்! அச்சிறுமி அவ்விடம் வந்த சில மாதங்களுக்குப் பிறகு, போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு, அவளிடத்தில் வெறுப்பு ஏற்பட்டது. வீட்டைவிட்டுப் போகச் சொன்னான். "ஐயோ எவ்விடம் செல்வேன்? என் மானத்தையும் கெடுத்துவிட்டாயே" என்று அழுதாள். இதுவா அவனிடம் பலிக்கும்? தன் உத்யோக தோரணையை இந்த நாலுமாத கர்பிணியான வத்ஸலாவிடம் செலுத்தித் தூரத்திவிட்டான்.

உலகத்தில் எல்லோருமே கெட்டவர்களாக விருப்பதில்லை. இந்த மாதிரி அனாதைகளுக்கென்றே தர்மசாலை ஒன்று ஏற்படுத்தியிருக்கிறாள் தர்மி என்னும் ஓர் முதியவள். இவள் தன் தகப்பனுருக்கு ஒரே பெண். அவர் ஏராளமான சொத்து உடையவர். சாகும் தருவாயில், தன் பெண்ணிடம் சொத்தை ஒப்படைத்து, நல்ல வழியில் பணத்தை வினியோகிக்கும்படிச் சொன்னார். இவள் தன் காலத்தைக் கன்னியாகவே கழிக்கப்பிரியப்பட்டவளாதலால், இத் தர்ம சாலையை நிர்மாணித்துத் தன்னிடம் அடைக்கலம் புகும் அனாதைகளைக் காப்பாற்றி வந்தாள். இவள் வயதிலும், க்யாதியிலும், முதியவளாதலால், இவளிடமிருக்கும் அனாதைகள் வெகு சிறப்புடன் வளர்க்கப்பட்டார்கள்.

நிற்க,வத்ஸலா அழுதுகொண்டே போவதைப் பார்த்த தர்மி அவளிடமிருந்து நடந்தவைகளை, அறிந்து கொண்டாள். "நான் இந்த தர்மசாலையை ஏற்படுத்தியிருக்கிறேன். இதில், படிப்பு, பாட்டு மற்ற நேரத்தில் ராட்டினத்தில் நூல் நூற்பதும் சொல்லித் தருகிறேன். நீ இவ்விடமே தங்கிவிடு" என்றாள். முதலில் தன்னை இதுபோலவே நல் வார்த்தை கூறிக் கற்பையழித்த பாவி பலராமன் செய்தவாறுருமோ என அஞ்சினாள். தர்மி இதைக்கண்டு அவளுக்கு நம்பிக்கை வருவதற்கு உள்ளே அழைத்துச் சென்று, அவ்விடமிருக்கும் மற்றப் பாலிகைகளைக் காண்பித்த பிறகு, பயம் தெளிந்து, அவ்விடமே தங்கினாள்.

நாட்கள் பல கடந்து வருஷங்கள் ஆறரையையும் எட்டிப்பிடித்துவிட்டன. இதற்கிடையில், வத்ஸலா அவ்விடம் சேர்ந்த சில மாதத்தில், ஓர் ஆண் சிசு பிறந்தது. இவளும், தமிழிலும், ஆங்கிலத்திலும் நல்ல தேர்ச்சிபெற்றாள். பலராமனை வெறுத்தபோதிலும், அவன் சாயலையே ஒத்திருந்த அக் குழந்தையால் அவனை அவளால் மறக்க முடியவில்லை. தர்மி இவளிடத்தில் நம்பிக்கையாகவும், மிகவும் ப்ரியமாகவுமிருந்தாள்.

இப்படியிருக்க, பத்து மைலிலிருக்கும் அடுத்தக் கிராமத்திலிருந்து,ெ பண்பாடசாலைத் திறப்புவிழாக் கொண்டாட்டத்திற்கு நம் தர்மிக்கு அழைப்புக் கடிதம் வந்தது. அவளை அடிக்கடி பீடிக்கும் மார்வலி அன்று கொஞ்சம் அதிகமாயிருந்தபடியால் வத்ஸலாவைக் கூப்பிட்டு தனக்குப் பதிலாக அவளையனுப்பினாள். விழாவும் வெகு விமர்சனையுடன் நடந்தது. இந்தப் பாடசாலைக்கு எதிரேயிருந்த சாவடியிலிருந்தே கொண்டாட்டத்தை வெகுநேரமாகப் பார்த்துக் கொண்டிருந்த ஓர் மனிதனை அகஸ்மாத்தாகக் கவனித்த வத்ஸலாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது. உடனே பலராமனின் உருவம் அவள் மனக்கண்முன் தோன்றி, சாவடியிலிருக்கும் மனிதனைச் சேர்ந்துகொண்டது! தாமதம் செய்யாமல் அவனிடம் குழந்தையுடன்போனாள். பலராமனுக்கு இவளைத் தெரியவில்லை. இதை அறிந்த வத்ஸலா, தான் யாரென்பதை அறிவித்தாள். பலராமன் "வத்ஸலா! என்னை மன்னிப்பாயா! உன்னை நான் துரோகம் செய்த பலன்தான் என

தொடர்ச்சி 102-ம் பக்கம் பார்க்கவும்

ஆவச்யகக் கல்வி

(ESSENTIAL EDUCATION)

டாக்டர் டி. வி. ராதாகிருஷ்ண சாஸ்திரி, எம்.ஏ.,எல்.டி.

குழந்தைகள் ஓர் நாட்டின் வருங்கால ப்ரஜைகள். அவர்களைச் சீராட்டி வளர்ப்பதேபோல் கல்வியையும் புகட்டி தன்னம்பிக்கை யுள்ளவர்களாகச் செய்வது பெற்றோர்களின் கடமை. சுபாவத்திலுள்ள வாசனைகளைப்போல் குழந்தைகளைச்சுற்றி ஏற்படும் சமயசந்தர்ப்பங்களும் ஓர்வகை வாசனைகளை யுண்டாக்கக்கூடியவைகளே. ஆகவே பெற்றோர்களும் உற்றார்களும் வருங்காலத்தில் எவ்விதம் தங்கள் குழந்தைகள் உருவாக வேண்டுமென்று விரும்புகிறார்களோ அவ்வித வளர்ச்சிக்குகந்தாற்போல சூழ்நிலைகளை யமைக்கவும் பாடுபடவேண்டும். குழந்தைப்பருவம் நீங்கி எழுத்தறியும் பருவம் தொடங்கும்பொழுது பேராசிரியரொருவரால் கல்விபோதிக்க ஏற்பாடு செய்யவேண்டும். இது பரம லக்ஷ்யம். இவ்வாசார்யன் ப்ரத்யக்ஷ தெய்வமாகிறான் இம் மாணாக்கனுக்கு. வெகுசிலருக்கே இவ்வித பரமலக்ஷ்யத்தையடைய இடம் பொருள் ஏவல்கள் சித்திக்கும். இதற்கடுத்தபடியாக முயலக்கூடியது நமது லக்ஷ்யங்களுக்கொத்த சங்கல்ப சக்தி பெற்றிருக்கும் ஆசாரியனிடம் பலரும் தங்கள் தங்கள் குழந்தைகளையனுப்பி கல்விபயிலச் செய்தல். இது பழமையான குருகுலவாசம். மனமிருந்தால் பலரும்கையாளக்கூடிய முறையே. தற்காலம் சகலரும் கைக்கொள்ளக்கூடியதும் சுலபத்தில் சித்திக்கக்கூடியதும் ஆகிய மூன்றாவது திட்டம் ஒன்றிருக்கிறது. ஓர் ஆசிரியனிடம் பலவேறு குழந்தைகளையும் ஒப்புவித்துப் பொதுவான அறிவைப் போதுமான அளவிற்குப் புகட்டுமாறு கேட்டுக் கொள்ளுதல். விசேஷ அறிவு வளர்ச்சிகளுக்கென்று விசேஷ ஏற்பாடுகளைப் பிறகு செய்து கொள்ளலாம். இக்கல்வித் திட்டத்திற்கு ஜாதிமத பேதங்கள், தனிகர், வறியோரென்ற வித்தியாசங்கள் முதலியவைகள் எவ்வித இடையூறுகளையும் உண்டாக்காது. இவ்விதம் பூர்வாங்கமான ஓர்வித கல்வியைக் கற்காது விசேஷமாக எவ்வித கல்வியையும் பலன் பெறும் வகையில் அப்யசிக்க முடியாது என்ற காரணத்தினால் இக்கல்வியை "ஆவச்யகக்கல்வி" என்று கூறுவோம்.

விஞ்ஞானம், கலை, நாகரீகம் இவைகள் நாடோறும் வளர்ந்துவரும் இக்காலத்தில் இவைகளையறிந்து பயன்பெற இருகண்கள் போன்றவை "எண்ணும் எழுத்தும்" இவைகளைப் போதிக்கும் முறை தத்துவங்களை யாராய்ந்து நமக்குதவவேண்டியவர்கள் போதனாமுறை யாலோசனையாளர்கள். இவைகள் போதிக்கப்படவேண்டியவை என்பது எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டியதே.

ஆகவே தாய்மொழி, தேசியமொழி, சர்வதேசிய வியவகாரங்களுக்கென்று ஓர் மொழி, கலைச்சுவைப் பெருக்குக்கென இன்னுமோர் மொழி, எனக் குறைந்தது நான்கு மொழிகளையாவது எழுதப்படிக்க கற்பிக்கவேண்டும். எவ்வளவுக்கெவ்வளவு அதிக மொழிகளைப் பயிலமுடியுமோ அவ்வளவுக்கு நன்மையுண்டு என்ற ஓர் எண்ணத்தை மனதில் பதியுமாறு போதிக்கவேண்டும். "எண்" என்கிற கணிதமும் வாழ்க்கைக்கு இன்றியமையாததென்றறியும் வகையில் போதிக்கப்படவேண்டும். எண்ணையும் எழுத்தையும் போதிக்க முயலுகையிலேயே இவைகளின் சாதனமாக உதவும் பாடங்களைக் கொண்டே விஞ்ஞானம், சரித்திரம், பூகோள தத்துவங்கள், பொதுவான தருமங்கள், நியமங்கள் முதலிய பொது அறிவுக்குகந்த விஷயங்கள் அறியப்படும்.

இவ்விதம் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் பயன்படுத்திப் பெரிதும் பலனுற செய்யப்படும் ஓர் பயிற்சியில் உதாரண

மாகக்கூட சத்யத்திற்குப் புறம்பான விஷயங்களைப் புகுத்தக்கூடாது. நம்முடைய முதிர்ந்த சித்தத்திற்கு சில விஷயங்கள் ஒப்புக்குச் சொல்லப்பட்டவை என்று புலப்படும். குழந்தையுள்ளத்தில் இவ்வித எண்ணம் தோன்றாது. எது கூறினும் பசுமரத்தாணி போல் பதியும். அசத்தியத்தையும் சத்தியமென்றே நம்பும்தருணம். அசத்தியம் ஒன்றிருப்பதாகவே புலப்படாத சமயம். இவ்வித சந்தர்ப்பத்தை நழுவவிடாது எழுத்தின் புனிதத்தன்மையில் தீவிர பக்தி கொள்ளுமாறு செய்யவேண்டும். எழுத்தில்கண்டது பொய்யாகாது என்ற திடநம்பிக்கை ஏற்படவேண்டும். அப்பொழுது வருங்காலத்தில் இப்பொழுது பயிலும் கல்வி தக்கத் துணைபுரியும்.

கணிதப்பாடம் கற்பிக்கப்படுகையில் ஒவ்வோர் கணக்கிலும் சில பொருள்களையும் அவைகளினுலேற்படும் காரியங்களையும் கூறியே விடையை யாலோசிக்கச்செய்ய வேண்டியதென்பதை யறிவோம். இவ்விதம் குறிப்பிடும் விஷயங்கள் தீருமத்திற்கும் உண்மைக்கும் ஒட்டியதாகவே இருக்கவேண்டும். உதாரணமாகச் சில கணக்குகளை கவனிப்போம்.

(1) ஒரு லேவாதேவிக்காரன் ரூபாய் 100ஐ வட்டிக்கு விடுகிறுன். மாதம் ஒன்றிற்கு ரூபாய்க்கு ¼ அணு விதம் வட்டி வாங்கினுல் மூன்று மாதங்களில் வட்டியும் முதலும் எவ்வளவு?

விடை ரூ. 104—11—0 என்று கூறுவது சரியே. ஆனுல் ரூ. 1-க்கு மாதம் 1பை கிரமவட்டி என்று நாம் ஒப்பும் சமயம் 3பை வட்டி நடைமுறையில் இருக்கிறதாகக்கூடக் குழந்தை யுள்ளத்தில் ஏற்படும்படியான இக்கணக்கு தர்ம விரோதம். "அநியாய லேவாதேவிக்காரனென்று" பதம் இருந்திருந்தால் இது சரியான கணக்காகும்.

(2) ஒரு விறகு பிளக்கிறவன் 1எடை பிளக்க 6பை கூலி பெறுகிறுன். ஒருநாளில் ரூ. 1—4—0 கூலிபெற எவ்வளவு பிளக்கவேண்டும்? என்றுல் விடை 40 எடை.

ஆனுல் ஒருவன் ஒருநாளில் 40 எடையும் பிளக்க முடியுமா என்பதை யாலோசிக்க வேண்டும். 7-அணு சம்பாதிக்க எவ்வளவு பிளக்கவேண்டும்? என்று கேட்டு 14 எடை என்ற விடையை எதிர்பார்ப்பதினுல் கணித அப்பியாசம் குறைவாகதல்லவா? இவ்விதம் ஒவ்வொரு விஷயத்தையும் பாடபுத்தகத்தில் புகுத்துமுன் புத்தகாசிரியர்கள் தீர ஆலோசித்துச் செய்தல் மிக முக்கியம்.

மேலும் போதிக்கப்படும் விஷயங்கள் அத்யாவசியமா என்பதைப் பரிசீலனை செய்து அவசிய மில்லாதவைகளைத் தவிர்க்கவேண்டும். குழந்தைகளின் மூளைக்கு அவசியமில்லாத சிரமங்களைக் கொடுக்கக்கூடாது. எந்த விஷயங்களை மறந்தால் வாழ்க்கையில் தொந்தரவுக்குள்ளாக நேரிடுமோ அவ்விஷயங்களை மட்டும் முதலில் போதித்து ஞாபக சக்திக்கு வேலைகொடுக்க வேண்டும். ஒவ்வொரு விஷயமும் இன்றியமையாததாகப் புலப்படப் புலப்பட தானுகவே ஒவ்வொருவரும் ஞாபகத்தில் ஏற்றுக் கொள்வார் என்பதை ஆசிரியர்கள் மறக்கக்கூடாது. இதேமாதிரி எழுத்து எழுதிப் பழகவேண்டு மென்பதற்காக ஏதாவதொன்றை எழுதச்சொல்லுவதைவிட எழுதப்படவேண்டிய பலவிஷயங்களையோ அல்லது ஞாபகத்திலிருந்த சில சாதக விஷயங்களையோ எழுதிப் பயிலுவது நலம். இப்படியே விவரிக்கின் பெருகும்.

பொதுவில் கூறுங்கால் நமது மனது இந்திரியங்களிவைகள் நமக்குகந்தவைகளைக் கட்டாயம் பூரணமாக கிரகிக்கவும் உபயோகிக்கவும் சக்திவாய்ந்தவைகளே. ஞாபகத்திலிறுத்த வேண்டியவைகள் கட்டாயம் மூளையில் தங்கும். மறதி என்பது ஓர் குற்றமில்லை. பலவீனமுமில்லை. ஆரோக்கியமுள்ள ஒருவன் விஷயங்களை மறக்கிறுனென்றுல் இயற்கை யவனை எச்சரிக்கிறதென்றே கொள்ளவேண்டும். "ஓ, மயக்கமுற்ற மானிடனே வீணில் ஏன் வேண்டாத

விஷயங்களை எல்லாம் ஞாபகத்திலிருத்தும்படி முயன்று என் சக்திகளை துஷ்ப்ரயோகம் செய்கிறாய். வேண்டாம் இத் தடுமாற்றம்." என்று நமக்குச் சொல்லும் நல்லுபதேசமும் எச்சரிக்கையுமாகும். "மறதி". இதைப் புறக்கணித்தோமேயாகில் இன்றியமையாத விஷயங்களையும் மறக்கும் வியாதியினவஸ்தை நம்மைப் பீடிக்கும்.

பள்ளிச் சிறுவன் வயதுவந்த யுவாவாகி க்ருகக்ருத்யங்களுக்குப் பொறுப்பேற்க ஆரம்பித்தால் பலவேறு தொழிலாளிகளுடன் கூடிப்பழக நேரிடும். அப்பொழுது ப்ரதியொரு தொழிலாளியினுடைய சிற்சில பரிபாஷிக பதங்களை யறிந்தேயாகவேண்டும். பால்யத்திலேயே இப் பதங்களை யறியச் சந்தர்ப்பங்களேற்பட்டிருந்தால் வெகு சுலபத்தில் வாழ்க்கையில் சமாளித்துக்கொள்ளலாம். இவ்விதம் பயன்பெறுமாறு ஓர் புத்தகம் பாடக்கிரமத்தில் சேர்க்கப்படவேண்டும். "பிரதாபமுதலியார் சரித்திரம்" போன்ற ஓர் புத்தகம் எழுதப்படவேண்டும். இக்கதையின் ஸ்வாரஸ்யத்திலேயே ப்ரதியொரு தொழிலாளியைப் பற்றியும் குழந்தைகளறியச் சந்தர்ப்பங்கள் அமைக்கப்பட வேண்டும். கதாநாயகன் தேசசஞ்சாரம் செய்யும் கட்டங்களின் வாயிலாகப் பூகோளம்சரித்திர உண்மைகள், விஞ்ஞான வளர்ச்சியினுபயோகங்கள், இவைகளைத் துஷ்ப்ரயோகம் செய்வதினலேற்படும் அனர்த்தங்கள், அரசியல், சமூகத்தொண்டு முதலிய பலவேறு விஷயங்களையும் ஆர்வமுடனறியச் சாதகமாக விளங்கும் இன்னால். எண்ணையும் எழுத்தையும் போதிபிக்கவும் இச்சரித்திரம் உபயோகப்படும் விதம் விஷயாலோசனைகள் புகுத்தப்படலாம். இச்சரித்திரத்தையே படமாகப் பிடித்துக் குழந்தைகளுக்குக் காட்டலாம். குழந்தைகளைக்கொண்டே சிறுகச் சிறுக இதை நடிக்கவும் செய்யலாம். பிறகு சௌகரியப்ரகாரம் குழந்தைகளுக்கு ஓர் சுற்றுப்பிரயாணத் திட்டமும் வகுத்து புத்தகத்திலுள்ள உண்மையையகத்துள்ளதே என்றறிவுறுத்தலாம்.

இவ்விதமளிக்கப்படும் கல்விமுறையில் மறந்துபோகவேண்டிய அம்சங்களே இருக்காது. அப்படியே சில விஷயங்கள் மறந்தாற்போலிருந்தாலும் உண்மையில் அநுபவம் கிட்டுங்கால் பளிச் சென்று மூளையில் உதிக்கும். ஆகவே குழந்தைகளின் ஞாபகசக்தியை சோதித்தறியப் பரீக்ஷைகளனாவச்யம்.

இவ்வாறு சகலருக்கும் பொதுவாக இன்றியமையாததாக ஏற்படுத்தப்படும் இக்கல்வி முறையைத்தான் "**ஆவச்யகக் கல்விமுறை**" என்று வழங்குவோம்.

இக் கல்வியைத்தான் ப்ரதியொரு கிராமத்திலும் கிராமவைத்திய—வாத்தியார் புகட்டவேண்டுமென்று முன்பு கூறியுள்ளேன். ("கிராம வைத்தியரே வாத்தியாருமானல்" பாரத மணி, தை இதழ் சித்ரபானு வருஷம்.)

விசேஷ விஷயங்களைக் கற்க விரும்புபவர்கள் அதற்கென்றே சங்கல்ப சக்தியைப் பெருக்கிக்கொள்ள வேண்டும். அதற்கேற்பட்ட ஆசார்யனை யடைந்து கற்றுணரவேண்டும். தானகவே ஞாபக சக்தியும் அதிகமாகும் "ஆவச்யகம்" என்ற சங்கல்பத்தினல் பலருக்குப் பயன்பட உழைக்கமுடியும்.

இவ்வாறின்றித் தற்காலம் படிப்பது போல் கல்விக்கென்ற சங்கல்பமில்லாமல் கதாநுகதிகர்களாக நாம் படிக்கும் படிப்பெல்லாம் கேவலம் பட்டத்திற்கும் அதன் மூலம் கிடைக்கலாமோ என்ற பதவி நட்பாசைக்காகவும் அடிமையைப் போல் உழைத்தோமென்றுதான் மனப்பூர்வமாகக் கூறுவேன். ஓர் எம். ஏ., "12 வருடங்களுக்குமுன் படித்தது எங்கே ஞாபகமிருக்கும்?" என்று பெருமையாகச் சொல்லிக்கொள்ள நம்சமூகம் இடம் கொடுக்கிறது.

இவ்வித நிலையையறிந்தே நம்நாட்டின் தற்கால கல்விமுறையைப் பலரும் கண்டிக்கிறார்கள். ஆகினும் இம்முறையை மாற்றி யமைக்கும் நோக்கத்துடன் அநுஷ்டானத்தில் அதிகம் ஒருவரும் ஒருமுறையையும் கையாண்டு பலன்

பெறமுடியவில்லை. ஏன்? அவர்கள் ஜனங்களைத் திருப்ப முடியவில்லை.

ஒவ்வொருவராகக் கூப்பிட்டுப் பேசிப் பாருங்கள். புதிய முறையில் கல்வி சீர்திருத்தம் அவச்யம் என்று ஒப்புக் கொள்வர். ஓர் தேசியப் பள்ளிக்கூடத்தைச் சுட்டிக்காட்டி இப் பள்ளியில் சேர்ந்து படிக்கும் பிள்ளைகள் நல்ல கல்வியைப் பெறுவார்களல்லவா என்றால் "ஆம்" என்பார்கள். இதற்கு நாம் எல்லோரும் ஒத்துழைத்துதவ வேண்டாமா என்று கேட்டால் "ஆம் அவசியமாக" என்ற பதில் வரும். தயவு செய்து உங்கள் குழந்தையை இன்று முதலே அனுப்புங்கள் என்று சொன்னால் வந்தது குழப்பம் "அனுப்பவேண்டியதுதான். எனக்கும் ஆசைதான். ஆனால்....". என்ன ஆனால்? என்றால் "எல்லோரும் சேர்ந்துதானே செய்ய வேண்டும்" என்பார்கள். இதன் தாத்பர்யம் தான்மட்டும் வாலறுந்த நரியாக விரும்பவில்லை என்பது. கல்வியினுன்னத லக்ஷ்யத்தில் ஆர்வமிருப்பதாகவும் பாடுபட முயலுவதாகவும் பெருமைப்பட விருப்பம். உண்மையில் தன் குழந்தை படிப்பது உத்தியோகத்திற்காக உள்ள ஓர் சபலம் என்பதைப் பட்டவர்த்தனமாகக் கூறும்படி என் இங்கிதம் தெரியாமல் வற்புறுத்துகிறீர் என்று நம்மைக் கேழ்க்கும் சொல்தான் அந்த "ஆனால்". எந்தக் கல்வியின் சிகரமாக விளங்கும் பட்டங்களுக்கு துரைத்தனத்தாரும் மற்றைய முதலாளிகளும் மதிப்புக்கொடுத்து ஊழியர்களாக ஊதியமும் கொடுத்து நம்மைக் கரையேற்ற முயலுகின்றார்களோ அக்கல்வியொன்றே பின்பற்ற வேண்டிய விஷயம் என்று உலகமறிந்த உங்களுக்கும் எனக்கும் கூறவும் வேண்டுமோ.

ஆகவே எந்தமுறையும் மேற்படி சமயத்தில் இடைஞ்சல் விளைவிக்காத முறையில் சாதனத்திற்குக் கொண்டு வரப்படவேண்டும். வார்தா திட்டம் முதலியவைகளை ஆராய்ந்து பாருங்கள். இவைகள் பொதுஜனங்களால் உடனே யமுலுக்குக் கொண்டுவரப்படாத நிலையிலிருப்பதற்குக் காரணம் மேற்கூறிய "ஆனால்...." தான். நான் விவரித்திருக்கும் "ஆவச்யகக்கல்வி முறையும்" வார்தா திட்டத்தைத் தழுவியதுதான். வார்தா திட்டத்தில் தொழில்மூலம் பயிற்சியளிக்கப்படவேண்டும் கல்வி ஞானம் என்ற விஷயத்தின் தத்துவம் கையாளப்பட்டிருக்கிறதைக் கவனியுங்கள்.

எல்லா மதத்தினரிடையும், எந்நாட்டிலும், எக்காலத்திலும் மாறாமல் காணப்படும் குழந்தைகளின் தொழிலாகிய கதைகேழ்ப்பது, கூறுவது, நடித்துப் பார்ப்பது என்ற பொதுத்தொழில்மூலம் பொதுக்கல்வியாகிய "ஆவச்யகக்கல்வி" போதிக்கப்பட வேண்டும். வார்தா முறையில் பள்ளிக்கூட நிர்வாகச் செலவை ஈடுகட்டச் சிறிது முயற்சி எடுத்திருப்பதை யொட்டியே கிராம வைத்தியரைச் சம்பாதிக்கச் செய்து கிராம வாத்தியாராக பிறகு விளங்கி இக்கல்வியைப் போதிக்க திட்டம் வகுத்துக்காட்டியுள்ளேன் முந்தியக்கட்டுரையில். இவ்வாவச்யகக் கல்வியை 11 பிராயத்திற்குமுன் பயிலும்படி செய்துவிட்டால் பிறகு விசேஷக் கல்விக் கிடைஞ்சல் ஏற்படாது. பரீக்ஷிக்கப்பட்டால் நடைமுறை பள்ளிகளில் 8வது வகுப்பிற்கு லாயக்காக விருப்பார்கள் இக்குழந்தைகள். மேலும் முக்கிய கிராமாந்தரங்களில் வைத்தியனின் கட்டாயத்தாண்டுதலின்பேரில் அப்யசிக்க இணங்கிவரும் இக் குழந்தைகளுக்கு சபலத்தைக்கொடுக்கும் மற்றொரு பள்ளியும் கிடையாது. ஆகவே மற்ற முறைகளை யெல்லாம் பயமுறுத்தித் திணற வைக்கும் "ஆனால்...." இம்முறையை தடுக்கவோ யழிக்கவோ முடியாது.

பின் எவியக்கம் வேண்டுமென்றால் மதிமயக்கமுற்றுச் சரியான வழியில் ப்ரவர்த்திக்கச் சுதந்திர தாகமில்லாத பாமர ஜனங்களை இக் கல்வியினால் பயன் பெறும்படிச் செய்ய சக்தி "கிராம வைத்தியரே கிராம வாத்தியாருமானால்" ஏற்படும் என்று திரும்பவும் கூறுவது மிகைபடக் கூறுதலில்லை.

வங்க சமூகம்

வே. ரா. சுந்தரராமன், எம். ஏ.

இக்கட்டுரையின் நோக்கம்

தமிழ்நாட்டுப் புத்தகக்கடை எதேனும் ஒன்றிற்குப்போய் சிறந்த வெளியீடுகளாகக்கருதப்படும் புத்தகங்களின் பட்டியலைப் புரட்டிப்பார்த்தால் அதில் அதிகமாய் உள்ளவை வங்க மூலத்திலுள்ள நூல்களின் மொழிபெயர்ப்புகளாகவே யிருக்கும். தமிழ் நாட்டின் பல பள்ளிக்கூடங்களிலும், கலாசாலைகளிலுமுள்ள மாணவர் சங்கங்களில் எதாவது ஒரு விசேஷம் நடந்தால் ஆரம்பத்தில் கவி ரவீந்திரரின் "ஜனகனமன" என்று தொடங்கும் பாட்டே பாடப்படுகிறது. தேசியக் கூட்டமானால் "வந்தேமாதரம்" என்னும் வங்க மொழியிலுள்ள பாட்டு பாடப்பட்ட பின்னரே சொற்பொழிவுகள் ஆரம்பிக்கும். தமிழ் நாட்டுக் கடைகளில் விற்கப்படும் சுதேசிப் பொருள்களுள்ளும் பல வங்க நாட்டில் செய்யப்பட்டனவே.

வங்க மக்களிடம் இவ்வளவு மோகங் கொண்டிருக்கும் நம்மவர்களுள் எவ்வளவு பேர்களுக்கு வங்க சமூகத்தைப் பற்றி நன்கு தெரியும் என்று கேட்டால் மிகச்சிலருக்கே என்று எளிதில் விடையளித்து விடலாம். வங்க நூல்களைத் தமிழில் மொழிபெயர்த்து வரும் ஓர் இளம் எழுத்தாளர் எனக்குச் சமீபத்தில் அறிமுகப்படுத்தப்பட்டார். "தத்" என்பது பிராமணப்பெயர்தானே என்று அவர் என்னைக்கேட்டதை இதற்கு ஓர் உதாரணமாய்க் கூறலாம். இவ்வருளை நீக்கி வங்க நாட்டைப்பற்றியும் வங்க மக்களைப்பற்றியும் தமிழருக்குச் சில உண்மைகளைத் தெரிவிப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழ்நாடும் வங்கநாடும்

தமிழ்நாட்டிற்கும் வடஇந்திய மாகாணங்களுக்கும் உள்ள வேற்றுமைகளைத் தமிழ் நாட்டின் எல்லையைக் கடந்து வடநாட்டிற்குச் சென்றிருப்போர்களே நன்கு உணர முடியும். இரண்டிற்குமிடையில் அவ்வளவு பெரிய வித்தியாசம் தோன்றுகிறது. நடையுடைபாவனை, உணவு, மொழி, இசை—ஏன்! தோற்றங்கூட—இவைகள் எல்லாவற்றிலும் வடமாகாணங்கள் தென்னாட்டைவிட முற்றிலும் வேறுபட்டிருக்கின்றன. வடநாட்டு மாகாணங்களாகிய பஞ்சாப், ஐக்கிய மாகாணம், பீஹார், வங்கம் முதலியவைகளுக்குள் இத்தகைய வேறுபாடு தோன்றவில்லை. ஆனால் பலவிஷயங்களில் ஏனைய வடநாட்டு மாகாணங்களைவிடச் சென்னையைச் சில விஷயங்களிலேனும் ஒத்திருப்பது வங்கமாகாணமே.

வங்கமக்களின் உணவு

சென்னை வாசிகளைப்போல் வங்க மக்களும் தங்கள் உணவில் பெரும்பாகம் அரிசிசோற்றையே சேர்த்துக்கொள்ளுகின்றனர். ஏனையவடநாட்டு மாகாணங்களில் கோதுமை அதிகமாய் உபயோகிக்கப்படுகிறது. இதுவங்கத்திற்கும் நம் நாட்டிற்குமுள்ள ஒற்றுமைகளுள் ஒன்று. ஆனால் சில அம்சங்களில் வங்க தேசத்தாரின் உணவு நம்முடைய உணவிலிருந்து முற்றிலும் வேறுபடுகிறது. வங்க மக்களின் உணவில் தினந்தோறும் வேண்டியிருப்பன மீன், கத்திரிக்காய், உருளைக்கிழங்கு என்னும் மூன்று வஸ்துக்களே. மீன் தான் இவர்கட்கு ஜீவன் என்றுகூடச் சொல்லிவிடலாம். எந்த ஜாதியைச் சேர்ந்தவனாயிருந்தாலும் மீன் உண்ணாதவன் இல்லை. இவைகளுடன் ஒவ்வொரு முறையும் உணவுடன் "ரஸகுல்லா", "சந்தேஷ்" என்று சொல்லப்படும் வங்க மாகாணத்திற்கே உரித்தான தித்திப்பு பக்ஷணங்களையும் சாப்பிடுகின்றனர். இவர்கள் மோர் என்பதை அறியாதவர்களாயிருப்பது ஆச்சரியத்தைத் தருகிறது. தயிரையும் சொற்பமாகவே சாப்பிடுகின்றனர். அதுவும் சர்க்கரை

போடப்பட்டு இனிப்பாயிருப்பது. சமையலில் இவர்கள் கடுகெண்ணெயை உபயோகிக்கின்றனர். உருளைக்கிழங்கையும் கத்திரிக்காயையும் “பாஜா” என்னும் ஒரு பதார்த்தமாகச் செய்து உட்கொள்ளுகின்றனர். இது பார்வையிலும் சுவையிலும் எண்ணெயில் வதக்கிய ஒருவித வருவல்போலிருக்கும்.

இவர்கள் சாப்பிடும் முறையும் சற்று வியப்பளிப்பதாகவே யிருக்கிறது. நாம் செய்வதுபோல் இவர்கள் சாதத்தை வேண்டியபோது இடையிடையே தருவித்துப் போட்டுக் கொள்ளுவதில்லை. போஜனத்திற்கு உட்காரும் போதே வேண்டிய சாதம் முழுவதும் ஒரு சிறு குன்றுபோல் தட்டில்வைக்கப்படுகிறது. அப்புறம் கேட்டு வாங்கிக்கொள்ளுவதென்பதில்லை.

ஊறுகாயில் இவர்கட்குப் பிரியம். ஆனால் ‘ஆசார்’ எனப்படும் இவர்களுடைய ஊறுகாய் வகையறுக்களும் தித்திப்பு மயமே!

உடை

எந்த வருணத்தைச் சேர்ந்தவர்களாயிருந்தாலும் வங்க தேசத்தில் ஆடவர்கள் தங்கள் ஆடையைக் கச்சம்வைத்தே கட்டிக் கொள்ளுகின்றனர். அதாவது தமிழ் நாட்டில் வைதீகப் பிராமணர்கள் கட்டிக் கொள்ளுவது போல்; ஆனால் அவர்கள் கட்டிக்கொள்ளும் கச்சத்தில் ஒரு சிறு மாறுதல் தோன்றுகிறது. கொசுவிய கச்சத்தின் நுனியை இடப்பக்கம் தொங்க விட்டுவிடுகின்றனர். சிலர் இது நடக்கையில் இடையூறாயிராமலிருப்பதற்காகக் கச்சத்தின் நுனியைசட்டைப்பைக்குள் எடுத்துச் சொருகிக்கொண்டுவிடுகின்றனர்.

இக்கச்சம் கட்டும் வழக்கத்தை வங்க நாட்டில் இந்துக்கள் மட்டுமேயன்றி ஏனைய மதத்தினரும் கையாளுகின்றனர். எனவே தோற்றத்திலிருந்து ஒரு வங்க ஆடவனை இன்ன மதத்தைச்சேர்ந்தவன் என்று குறிப்பிடுவது அஸாத்யம்.

வங்கமக்கள் உடையில் அதிகப்பணத்தைச் செலவிடாதிருப்பது குறிப்பிடத்தக்கது. ஆடைக்குப் பகட்டைக் கொடுக்கும் சரிகை முதலிய பணத்தை இழுக்கும் சாதனங்களை இவர்கள் விரும்புவதில்லை. முதன் முதலாக வட இந்தியாவிற்கு வந்த சில தென்னிந்தியர்கள் பட்டைப் பட்டையாய் சரிகையுள்ள வேஷ்டிகளை உடுத்திக்கொண்டு வெளியில் செல்லுவதைக்கண்டு இவர்கள் நகைப்பதை நான் கண்டிருக்கிறேன்.

ஆடையில் சிக்கனம் செய்வதை முக்கியமாய் இவர்களுடைய பெண்பாலரிடம் காணலாம். தமிழ் நாட்டிலிருப்பது போல் வங்கப்பெண்மணிகள் விலையுயர்ந்த பட்டினால் செய்யப்பட்ட சேலைகளை விரும்புவதில்லை. சாதாரணப் பருத்தியுடையைத்தான் கட்டிக் கொள்ளுகின்றனர். நம்மூரார் போல் வெள்ளைப் புடவை அணிவதை இவர்கள் ஓர் அச்சானியமாய்க் கருதுவதில்லை. இவர்கள் வெள்ளை நிறங்கொண்ட சேலைகளையே அதிகமாக நாடுகின்றனரென்று கூடச் சொல்லலாம். அடிக்கடி சலவைசெய்து இவைகளைத் துல்யமாய் வைத்துக்கொள்ளுகின்றனர். சேலையில் சிக்கனஞ்செய்யும் இவ்வழக்கம் இவர்களிடத்திலிருந்து நம்மவர்கள் கற்றுக்கொள்ளக் கூடிய சில முக்கிய விஷயங்களில் ஒன்று.

வங்கப் பெண்பாலர் அணியும் சேலைகள் நீளத்திலும் நம்மவர்களின் புடவைகளின்நீளமாகிய 18முழங்களைவிட மிகக் குறைவு. இது இவர்கள் புடவைக்குக் கீழ் பாவாடைபோன்ற ஓர் உள்ளாடை கட்டிக்கொள்வதனால் இயலுகிறது.

வங்க வருணங்கள்

வங்க நாட்டு இந்துக்களில் முக்கியமாய் மூன்று வருணங்கள் தான் உண்டு. அவை பிராமணர்கள், காயஸ்தர்கள், தாழ்ந்த ஜாதியினர் என்பன. இவர்களுள் காயஸ்தர்கள் என்போர் தாங்கள் க்ஷத்திரியர்கள் என்று சொல்லிக் கொள்ளுகின்றனர். ஆனால் இதற்குத் தகுந்த ஆதாரமிருப்பதாகத் தெரியவில்லை. வேத

காலத்தியவருணங்களில் மூன்ருவதாகிய வைசிய சாதியைச்சேர்ந்தவர்கள் இங்கு அதிகமில்லை. தாழ்ந்த ஜாதியினர் என்று கருதப்படுபவர்களுக்கு "நாம சூத்திரர்கள்" என்றும் ஒரு பெயர்உண்டு. அவர்கள் வங்கநாட்டின் திண்டாமக்களுமாவர்.

வங்க மொழியும் உச்சரிப்பு விசேஷமும்

வங்க நாட்டவர் பேசும் மொழி 'பங்க்ளா' என்று அவர்களால் அழைக்கப்படும் ஒரு பாஷை. ஆங்கிலத்தில் அதை "பெங்காலி" என்கின்றனர். உண்மையில் அது ஸம்ஸ்கிருத பாஷையின் ஒரு சிதைந்த உருவமே. ஆதிகாலத்தில் பேசப்பட்டுவந்த ஸம்ஸ்கிருத உருவங்களின் ஒன்ருன "பிராகிருதம்" என்னும் மொழிதான் நாளடைவில் உருமாறி தற்காலத்தியவங்கமொழியாயிருக்கிறது. இம் மொழியின் நெடுங்கணக்கு வடமொழியெனப்படும் நாகரத்தின் நெடுங்கணக்கைப் போலவேதான் அமைந்திருக்கிறது. உச்சரிப்பில்மட்டும் சில கோணல்கள் ஏற்பட்டுவிட்டன. உதாரணமாக 'அ' 'ஆ' என்னும் எழுத்துக்களை இவர்கள் 'ஒ' 'ஓ' என்பனபோல் ஒலிக்கின்றனர். 'க்ஷ' என்னும் எழுத்து 'க்க' என்று இவர்கள் உச்சரிப்பில் மாறிவிடுகிறது. இவ்விரண்டையும் விடச் சற்று விபரீதமானமாறுதல் 'வ' என்னும் எழுத்திற்கு இவர்கள் அளித்திருக்கும் உச்சரிப்புதான். இவ்வெழுத்தை இவர்கள் சம்ஸ்கிருதத்தின் மூன்ருவது 'ப' (Ba) வைப்போல் உச்சரிக்கின்றனர். அதனுல் தான் வங்க தேசத்தின் பெயரே 'வங்க' என்பதிலிருந்து 'பங்க' என்று மாறிவிட்டது. ஸம்ஸ்கிருதத்தில் சில விடங்களில் 'வ' என்னும் எழுத்தும் மூன்ருவது 'ப' என்பதும் ஒன்றினிடத்தில் மற்றென்று வரலாம் என்பதைக் குறிக்க 'வபயோரபேத:' என்று ஓர் இலக்கண சூத்திரம் இருக்கிறது. ஒருக்கால் இச் சூத்திரத்தினுல் வந்த ஒரு விபரீத விளைவுதானே இம்மயக்கம் என்று எண்ண இடமிருக்கிறது.

வங்க மொழி யென்பது வெகுசமீபத்தில் தோன்றியதே. இருந்தாலும் தற்காலத்தில் இந்தியதேசத்து மொழிகளுக்குள் உலகப் பிரசித்த மடைந்திருப்பது இம் மொழிதான். இதற்கு முதற்காரணம் சமீபத்தில் காலஞ்சென்ற கவி ரவீந்திரநாத தாகூர் தான். அவர் இயற்றியுள்ள அரிய கவிதைகளின் நயத்தையும் மேன்மையையுங் கண்டு மெச்சி மேநாட்டார் அவருக்கு நோபெல்பரிசை அளித்ததன் முக்கிய பயன் வங்க மொழியே உலகப் பிரசித்தியடைந்ததுதான்.

சமீபத்தில் உண்டான மொழியான போதிலும் இலக்கியப் பரப்பிலும் செழிப்பிலும் இந்தியாவில் வழங்கும் பாஷைகளுக்குள் வங்க பாஷைதான் முதன்மை ஸ்தானம் வகித்து நிற்கிறது. அதுவும் சிறுகதை, நவீனம் என்னும் இருபகுதிகளிலும் இம்மொழியிலிருப்பதுபோல் பிற மொழிகளில் இலக்கிய நூல்கள் இன்னும் தோன்றவில்லை.

வங்க எழுத்தாளர்களுள்பேர் போனவர்கள் பங்கிம் சந்திர சட்டர்ஜி, ரொமேஷ் சந்திரதத், சரத் சந்திர சட்டர்ஜி கவி ரவீந்திரநாத தாகூர் என்போர். தற்காலத்திய இளம் எழுத்தாளர்கள் தாங்கள் எழுதும் கதைகளிலும் நவீனங்களிலும் காதல் உணர்ச்சிகளையும் சிற்றின்பம் தரும்படி நிகழ்ச்சிகளையும் அதிகமாய்ப் புகுத்துகின்றனர் என்று வங்கநாட்டாரே குறை கூறுவதை நான்கேட்டிருக்கிறேன்.

வங்கப் பெயர்கள்

வங்கநாட்டில் பெயரிடப்படும் முறை நம் நாட்டிலுள்ளது போலில்லை. ஆங்கில முறைப்படி அது அமைந்திருக்கிறது. நம் ஊரில் மாயவரம் ராமசாமி அய்யர் குமாரன் கிருஷ்ணமூர்த்தி அய்யர் என்பதைக் குறிக்க மா. ரா. கிருஷ்ணமூர்த்தி அய்யர் என்போம். இதையே ஆங்கிலத்தில் எம். ஆர். கிருஷ்ணமூர்த்தி அய்யர் என்று எழுதுவோம். இதில், கிருஷ்ணமூர்த்தி என்று விரிவாய்ச் சொல்லப்படுவது குறிப்பிட்டநபரின் சொந்தப்பெயர். ஆனல் வங்கநாட்டில் குறிக்கப்படும் பேர்வழியின் சொந்தப்பெயர் அவனுடைய பெயராகச் சொல்லப்படுவதின்

முன் தோன்றும் இரு எழுத்துக்களுக்குள் மறைந்து நிற்கும். உதாரணமாய் பி. என். முகர்ஜி என்பவனுக்கு அவன் பிறந்ததும் அவனுடைய பெற்றோரால் இடப்பட்டு அவனுக்கே சொந்தமான தாயுள்ள பெயரான "பிரமதநாதன்" என்பது "பி. என்." என்னும் இரு எழுத்துக்களினால்தான் குறிக்கப்படும். முகர்ஜியென்று விரித்துச் சொல்லப்படுவது அவனுடைய குலப்பெயர்தான். நம்முடைய 'அய்யர்' 'அய்யங்கார்' 'ஆசாரியார்' 'ராவ்' என்பனவற்றைப்போன்றது.

மக்களை ஒருவருக்கொருவர் அடையாளம் கண்டுபிடிப்பதற்குச் சாதனமாய் அமைந்ததுதான் அவர்கட்கு இடப்படும் பெயர் என்பதைக் கவனித்தால், இவ்விரண்டு முறைகளுக்குள் நம்முடைய வழக்கந்தான் சிறந்ததென்பது விளங்கும். ஏனெனில், 'முகர்ஜி' களுக்குள் பலர் பிரமதநாதன் என்று பெயர் வாய்ந்தவர்களாயிருக்கலாம் ஆனால் 'கிருஷ்ணமூர்த்தி'களுள் ராமசாமி அய்யரைத் தந்தையாகக்கொண்டு மாயவரம் என்னும் ஊரையும் சேர்ந்தவர்களின் எண்ணிக்கை அவ்வளவு அதிகமாயிராது.

இவர்கள் பெயரிடும் முறையில் இன்னொரு விசேஷமும் இங்கு குறிப்பிடத்தக்கது. ஒவ்வொருவருக்கும் குழந்தைப் பருவத்தில் இரண்டு பெயர்கள் உண்டு. ஒன்று உண்மையான பெயர், மற்றொன்று " கூப்பிடும் பெயர் ". சாதாரணமாய் இவ்விரண்டிற்கும் ஒருவித சம்பந்தமும் இராது. கூப்பிடும் பெயராக இடப்படும் பெயர்கள் பெரும்பாலும் பொருளற்றவைகளாக இருக்கும். உதாரணமாக எனக்குத்தெரிந்த ஒரு வீட்டிலுள்ள 7 பிள்ளைகளுக்கு இடப்பட்டிருக்கும் 'அழைக்கும்பெயர்கள்' வருமாறு:– 'மஞ்சு', 'நீலு', 'பீலு', 'பூலு', 'டூலு', 'டுக்கூன்', 'பாபுலு'. பெண்குழந்தைகளுக்கும் இப்படியே. அவர்களுள் 'புதுல்' (இதற்கு 'பொம்மை' என்று பொருள்) என்பது சர்வசாதாரணம். ஏன்? நாமுந்தான் அழைக்கும் பெயர்கள் இடுகிறோம். ஆனால் அவை உண்மைப் பெயரை ஒட்டியவை. 'கிருஷ்ணமூர்த்தியை' 'கிச்சு' என்பதும் 'விசுவநாதனை' 'விச்சு' என்பதும் போல்!

வங்கநாட்டில் பெயரிலிருந்தே ஒருவனுடைய ஜாதியைச் சாதாரணமாய்ச் சொல்லிவிடலாம். அங்கு பிராமணர்களின் பெயர்கள் 'முகர்ஜி', 'சட்டர்ஜி', 'பானர்ஜி', 'பட்டாசார்ஜி', 'கங்கூலி', 'கோஷால்', 'ஸண்டியால்' (ஆங்கிலத்தில் இது 'ஸன்யால்' என்று எழுதி ஒலிக்கப்படுவது), 'சக்ரவர்த்தி', 'கோஸ்வாமி', 'ஆசார்யா', 'தாகூர்', 'மிச்ரா', என்பனவும் பிறவும். இவைகளுள் 'முகர்ஜி', 'சட்டர்ஜி', 'பானர்ஜி, 'கங்கூலி' என்பவர்கள் சற்று உயர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றனர். இப்பெயர்கள் அந்தந்தக் கூட்டத்தவர்கள் செய்துவந்த உபாசனையைக் குறிப்பன. 'மு க ர் ஜி' என்பது 'முகோபாத்தியாயா' என்னும் பெயரின் சுருக்குவடிவம். தேவியின் முகத்தை யாராதிப்பவர்களென்று இதற்குப் பொருள். அதேபாதிரியே 'சட்டர்ஜி', 'பானர்ஜி', 'கங்கூலி', என்பவை முறையே 'சட்டோபாத்தியாயா' 'பந்தோபாத்தியாயா', 'கங்கோபாத்தியாயா' என விரியும். 'பட்டாசார்யா' என்பவர்கள் கோயில்களில் பூசை முதலிய பணிகளைச் செய்பவர்கள். பிராமணர்களுக்குள் இவர்கள் சற்று மட்டமாம்.

இவர்களுள் ஒவ்வொரு பெயருரையுள்ள கூட்டத்தாரும் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்களாயிருக்கின்றனர். உதாரணமாக 'கோஷல்' என்பவர்கள் 'ஸ்ரீவத்ஸ' கோத்திரம். 'முகர்ஜி' 'சட்டர்ஜி', 'பானர்ஜி' என்பவர்கள் முறையே 'பாரத்வாஜ', 'காச்யப', 'சாண்டில்ய' கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள். எனவே ஸகோத்திர மணத்தை மறுக்கும் இந்து மதத்தைச் சேர்ந்த இவர்கள் தங்களுக்குள்ளேயே சம்பந்தம் வைத்துக்கொள்வதில்லை. முகர்ஜிக்கள் சட்டர்ஜி அல்லது பானர்ஜி முதலிய ஏனைய கூட்டத்தாருக்குள்தான் பெண்களைக் கொடுப்பதும் வாங்குவதும் வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

வங்க மக்களுள் 'வைத்திகள்' அல்லது 'வைத்திப் பிராமணர்கள்' என்று சொல்லப்படும் ஒரு பிரிவு உண்டு. இவர்கள் தாங்களும் பிராம்மணர்கள்தான் என்று சொல்லிக்கொள்கின்றனர். ஆனால் 'முகர்ஜி'—'சட்டர்ஜி' கோஷ்டியார் இதை அங்கீகரிப்பதில்லை. இப்பிரிவினர்கள் 'தாஸ்குப்தா', 'ஸென்குப்தா' என்னும் இருபெயரையுடையவர்கள். சில சமயம் இப்பெயர்கள் 'தாஸ்' என்றும் 'ஸென்' என்றும் குருகியும் விடுகின்றன.

'காயஸ்தர்கள்' என்று கூறப்படுபவர்கள் வங்கமக்களுள் ஒரு பெரும் பகுதியாவர். இப்பிரிவைச் சேர்ந்தவர்கள் முக்கியமாய் 'கோஷ்' 'போஸ்' 'மித்ரா' 'குஹ' 'தத்தா' என்ற ஐந்து பெயர்களையுடையவர்கள். 'போஸ்' என்பது வங்க மொழியில் 'வஸு' என்று எழுதப்பட்டு மேற்கூறிய 'வ'-ப-யோரபேத' மென்னும் விபரீதத்தினால் 'பஸு' என்று உச்சரிக்கப்பட்டு ஆங்கிலத்தில் 'போஸ்' என்னும் உருவுடன் தோன்றுகிறது. 'மித்ரா' என்பது சிலசமயத்தில் 'மித்திர்' அல்லது 'மித்தர்' என்று மாறும். 'தத்தா' என்பதும் 'தத்' என மாறும்.

பல சாதிகளுக்கும் பொதுவாயுள்ள சில பெயர்களும் வங்கநாட்டார்களுள் உண்டு. மஜூம்தார், ராய், சௌதரி, ஸர்கார், முன்ஷி, கான் என்பவை இந்த இனத்தைச் சேர்ந்தவை. இவைகள் முகம்மதிய அரசர்களால் கொடுக்கப்பட்ட பட்டப் பெயர்கள். இவை நம்மூர் 'ராவ்' என்னும் பட்டப் பெயரையொத்தன.

மதமும் விழாக்களும்

வங்கமக்களுள் பெரும்பாலோர் 'சக்தி' அல்லது 'பெண் தெய்வங்களை' வழிபடுபவர்கள். ஒரு சிறு பகுதியே வைஷ்ணவர்கள். இவர்கள் ஸ்ரீ கிருஷ்ண சைதன்யர் என்ற மகான் காட்டிய பக்தி மார்க்கத்தைப் பின்பற்றுபவர்கள்.

சென்ற நூற்றுண்டில் வாழ்ந்த ராஜாராம் மோகன்ராய் என்னும் பெரியார் தோற்றுவித்த 'பிரம்மஸமாஜம்' என்னும் நூதன மதத்தைப் பின்பற்றுவோரும் வங்கநாட்டில் பலர் உண்டு. இவர்களுள் மூன்று முக்கிய பிளவுகள் ஏற்பட்டுள்ளன. அவைகட்கு முறையே 'ஆதிபிரம்ம ஸமாஜம்', 'சாதாரண பிரம்ம ஸமாஜம்', 'நவவிதான பிரம்ம ஸமாஜம்', என்று பெயர்.

பூஜைகளும் விரதங்களுந்தான் வங்க மக்களின் முக்கிய விழாக்கள். இவை எல்லாவற்றுள்ளும் மிக்க ஆடம்பரத்துடன் கொண்டாடப்படுவது செப்டம்பர் அக்டோபர் மாதங்களில் வரும் 'துர்க்க பூஜை' என்பதும் 'காளி பூஜை' யென்று இவர்கள் அழைக்கும் நம் 'தீபாவளி'யுமே.

இவர்களுடைய மாதங்கள்

இவர்கள் மாதங்களைக் குறிப்பதற்கும் நம்முடைய முறைக்கும் ஒரு வித்தியாசம் உண்டு. இவர்களுடைய வருஷத்தில் வைகாசி யென்பதுதான் முதல் மாதம். சித்திரை யென்பது ஈற்றிலுள்ளது. ஆனால் இவர்களுடைய வருஷப் பிறப்பு தினம்மட்டும் நம்முடைய வருஷப்பிறப்பிற்கு ஒருநாள் முந்தியோ பிந்தியோதான் வருகிறது. எனவே நம்முடைய சித்திரை, வைகாசி முதலிய மாதங்களையே இவர்கள் முறையே வைகாசி, ஆனி....சித்திரை யென்று குறிப்பிடுகின்றனர். ஆனல் சோதிட சாஸ்திரத்தின் மற்றப்பகுதிகள் மட்டும் ஒரே மாதிரியேதானிருக்கின்றன. நக்ஷத்திரங்களின் பெயர்களும் ராசிகளின் பெயர்களும் நம்மூரில் வழங்கும் பெயர்களே.

ஆசாரங்கள்

சில விஷயங்களில் இவர்களுடைய ஆசாரங்களும் கொள்கைகளும் நம்மூரில் உள்ளவைகட்கு நேர்தலைகீழாயிருக்கின்றன. உதாரணமாக இவர்களுடைய கலியாண முகூர்த்தங்கள் இரவிலேயே வைத்துக்கொள்ளப்படுகின்றன. வாரத்தில் நமக்கு நல்லவை யென்று எடுத்திருப்பவை இவர்களுக்குக் கெடுதல். செவ்வாயும் சனியும் இவர்கட்கு நல்ல

நாட்கள். ஆனால் புதன் ஆகாதாம். நமக்கோவெனில் 'பொன்னகப்படினும் புதன் அகப்படாது'!

நம்மூரில் ஸ்திரீகள் தலையை விரித்துக் கொண்டு தெருவில் செல்வது ஓர் அவக் கேட்டைக் குறிப்பது. இங்கு இக் காட்சியை இளம் பெண்கள் அளிப்பது வெகு சகஜம்.

நம்முள் செருப்பணிந்து கொள்வது அவசியமுமில்லை, அதிகமுமில்லை. இங் கேயோவெனில் சவத்திற்குப்பின் செல் லுகையில்தான் வெறுங்காலுடன் வெளியே செல்லலாம்.

மொத்தத்தில் நமக்கு இருப்பதைவிட மூடக் கொள்கைகளும் மூடபக்தியும் இவர்களிடம் அதிகமாகக் காணப்படு கின்றன. ஆனால் இந்த சமூகத்தின் பல மிகப்பழைய ஆசாரங்களை இவர்கள் விட்டுவிட்டனர். இங்கு பிராம்மணர் களுள் பெரும்பாலோர் ஸந்தியாவந்த னுதிகளைச் செய்வதேயில்லை. இங்கு வந்தபுதிதில் நான் ஆவணியவிட்டம் செய்வதற்காக என் உத்தியோகசாலை யில் விடுமுறை கேட்டபொழுது முகர்ஜி என்னும் என் நண்பனொருவன் என்னை ஒரு பத்தாம் பசலிப் பேர்வழியென்று குறித்து ஏளனஞ் செய்தான்!

இங்கு ஆடவர்கள் உச்சிக்குடுமியை யும் திலகதாரணத்தையும் அடியோடு துறந்துவிட்டனர்.

உட்பிரிவுகள்

வங்க மக்களுக்குள் 'மேற்கு வங்கா ளத்தவர்கள்', 'கீழ் வங்கா ளத்தவர்கள்' என்ற இரு பிளவுகள் யாது காரணம் பற்றியோ ஏற்பட்டுவிட்டன. இவ்விரு பகுதியார் களுள்ளும் நடை புடை பாவனை, பேச்சு முதலியவைகளில் வித்தியாசம் தோன்று கிறது. கங்கை நதிக்கு (இவர்கள் இதை 'பத்மா' என்று எழுதிப் 'பொத்தா' என்று உச்சரிக்கின்றனர்) கிழக்கி லுள்ள பிரதேசங்களிலிருப்பவர்கள் கிழ க்கு வங்காளிகள். டாக்கா, மைமென் ஸிங், சிட்டகாங், பாரிசால் முதலிய ஜில்லாக்கள் கிழக்கு வங்காளத்தைச் சேர்ந்தவை. கங்கைக்கு மேற்கேயுள்ள ஜில்லாவாசிகள் மேற்கு வங்கத்தினர். இவ்விரு பகுதியாரும் ஒருவரை யொரு வர் வெறுக்கின்றனர். மேல் வங்காளத் தவர் நாகரிகமற்ற முரடர்கள் என கீழ் வங்காளத்தவர்கள் சொல்லுகின்றனர். கிழக்கத்தியர்கள் கள்ளங் கவடும் நய வஞ்சகமும் உள்ளவர்கள் என்பது மேற் குப் பகுதியோர்களின் அபிப்பிராயம்.

இவ்விரு பிரிவினரின் பேச்சிலும் வித்தி யாசம் உண்டு. வங்கமொழிவராத ஓர் அந்நியனுக்கும் இம்மாறுதல் எளிதில் தென்பட்டுவிடும். கிழக்கத்திக்காரர்கள் உச்சரிப்பில் 'ஸ' என்னும் எழுத்து அதிகமாய் ஒலிக்கும்.

வங்க சமுதாயம்

இந்துக்களுக்காக மனு வகுத்த சட்டம் தென்னிந்தியாவில் 'மீதாக்ஷரம்' என்னும் ரீதி யில் அனுசரிக்கப்படுகிறது. இதன்படி பிதுரார்ஜித சொத்தில் பிள்ளை களுக்கும் தகப்பனைப்போல் சம உரிமை யுண்டு. வங்கநாட்டில் இச் சட்டம் 'தாயபாகம்' என்னும் முறையில் பின் பற்றப்படுகிறது. இதன்படி தகப்பன் விருப்பமிருந்தால்தான் பிள்ளைகளுக்குச் சொத்து உண்டு.

நிலவரி திட்டத்திலும் இந்திய சர்க் காரின் மாஜி ராஜப்பிரதிநிதி கார்ன் வாலிஸ் பிரபு செய்த சீர்திருத்தத்தின் படி இவ்வூரில் நம்மூரிலுள்ளதுபோல் ரயத்துவாரி என்பதில்லை. ஜமீன்தாரி என்னும் திட்டத்தின்படிதான் இங்கு நிலவரி வசூலிக்கப்படுகிறது. இதன் பயனாக வங்க மக்களுள் சிலர் செல்வ வந்தர்களாயும் பெரும்பாலோர் எளியோ ராயுமிருக்கின்றனர்.

வங்கசமுதாயத்தின் அடிப்படையான அமைப்பு கூட்டுக்குடும்பமென்பதுதான். இதன்படி பாகமான பின்பும் உடன் பிறந்தோர்கள் ஒரே குடும்பமாய் ஒரே வீட்டில் இருந்து வருகின்றனர்.

வங்க நாட்டில் இந்துக்களும் 'பர்தா' அல்லது 'கோஷா' என்னும் வழக்கத்தை அனுசரிக்கின்றனர். இது முகம்மதிய

அரசாட்சியால் விளைந்த பயன்களுள் ஒன்று. ஆனால் மேனாட்டுப் படிப்பு ஏறி நாகரிகம் முதிர்ந்துவரும் இந்நாளில் இந்துக்களுக்குள் இவ்வழக்கம் அநேகமாய் மறைந்துவிட்டதென்றே சொல்லலாம்.

வங்கக் குடியிருப்புகள்

நம்மூரிலிருப்பதுபோல் தெருக்களடங்கிய கிராமங்கள் வங்கநாட்டிலில்லை. சுற்றிலும் நிலங்களும் அவைகளின் மத்தியில் சில வீடுகளுந்தான் வங்கநாட்டுக் கிராமம். ஒவ்வொரு வீட்டின் பின்புறம் மட்டும் ஒரு குளம் இருக்கும். கோயிலில்லா ஊரில் குடியிருத்தலாகாதென்பது வங்கநாட்டிற்குப் பொருந்தாது. ஏனெனில் இங்கு பல கிராமங்களில் கோயிலென்பதே கிடையாது.

வங்க தேசத்தில் எங்கும் ஜலமயந்தான். மாரிகாலத்தில் ஊர்முழுவதும் ஒரே வெள்ளக்காடாயிருக்கும். களை பிடுங்குதல் முதலிய விவசாயத் தொழில்களை இம்மக்கள் படகுகளிலிருந்து நடத்துவதை நான் கண்டிருக்கிறேன். ஒரு முறை தண்ணீரிலேயே ஒரு பெரிய தெப்ப உத்ஸவம்போல் சந்தையொன்று நடந்ததை நான் கண்டேன்.

எனவே இங்கு ரஸ்தாக்களும் ரோடுகளும் அதிகமாயில்லை. ரயில்மார்க்கமாய்ப் போகும்போது இடை யிடையே ரயிலிலிருந்து மாறி கப்பல்களில் நதிகளைக் கடக்கவேண்டி யிருக்கும். சில சமயங்களில் நதியிலேயே பல மணிகள் கப்பலில் பிரயாணம் செய்யவேண்டியிருக்கும். கல்கத்தாவிலிருந்து டாக்கா போகையில் 7, 8 மணி நேரமும் சிட்டகாங் போகையில் 10, 12 மணி நேரமும் கப்பல் பிரயாணம் செய்தாகவேண்டும்.

வங்கப்பெண்டிர்

இந்தியாவின் மற்ற மாகாணங்களிலுள்ள பெண் பாலர்களைவிட அழகிற்சிறந்தவர்கள் வங்க நாட்டுப் பெண்மணிகளே. நிறத்தில் சிவப்பாயிருக்குமிவர்கள் முகத்தில் நல்லகளையும் குறுகுறுப்பும் உண்டு. ஸ்திரீகளுக்கே உரித்தான தளுக்கும் மினுக்கும் வங்கப் பெண்களிடத்தில்தான் பிறர் கற்கவேண்டும். தங்கள் மேனியைச் சோபிதமாய் அலங்கரித்துக் கொள்வதில் இவர்கள் வெகு சமர்த்தர்கள். அதுவும் வெகு சொற்பச்செலவில் முடிந்து விடுகிறது. நம்மவர்போல் விலையுயர்ந்த நகைகளை இவர்கள் நாடுவதில்லை. காதில் சில அணுக்களே பொறுமான தொங்கட்டிதான் உண்டு. ஆனால் ஆயிரம் ரூபாயை விழுங்கியுள்ள நம் ஸ்திரீகளின் வைரத் தோட்டைவிட பதின் மடங்கு அழகாக இத்தொங்கட்டி முகத்தையலங்கரிக்கும். இவர்கள் இரு மூக்குகளிலும் நகைகளையணிவதில்லை. கழுத்திலுங் கைகளிலுங்கூட அணிகலன்கள் சிராகத்தான் இருக்கும். எளிதும் எல்லாம் ஒருங்குசேர்ந்து அளிக்கும் தோற்றம் எழில் பொருந்தியதாயிருக்கும். நம் மூராரோ வெனில் தங்களை ஒரு பளுசுமக்கும் நகை மாட்டியாய்ச்செய்து கொள்ளுவது தான் மிச்சம்!

இவர்கள் காதைமறைத்து தலைமயிரை வாரிக்கொள்ளுகின்றனர். தலையில் பூச்சூட்டிக்கொள்ளும் வழக்கம் இங்கு இல்லை. தலையை மறைத்து முக்காடிட்டு கொள்ளும் வழக்கம் இங்குஉண்டு. இதுவும் முகம்மதிய ஆட்சியின் ஒருவிளைவே.

இவர்கள் நெற்றியில் குங்குமமும் பாதத்தில் நலங்கிட்டுக் கொள்ளுவது போல் ஒருவித அலங்காரமும் செய்து கொள்ளுகின்றனர். இளம் பெண்கள் நம்மூரில் குஜிலிப்பொட்டு என்று சொல்லப்படும் ஒருவித கண்ணாடித் தகட்டை நெற்றியில் குங்குமத்திற்குப் பதிலாக அணிகின்றனர்.

வங்கமக்களின் குணநிசயங்கள்

வங்க மக்கள் பொதுவாக மரியாதையுள்ள நடத்தையுடையவர்கள். ஒருவன் மற்றொருவனைக் கூப்பிட்டால் பதிலளிப்பவன் முதன் முதலில் 'ஆக்ஞை' ('கட்டளை' யென்றுபொருள்) என்று தான் பதிலளிப்பான்!

இவர்களுடைய முக்கிய குணநிசயம் தங்களைப்பற்றி பெருமையாய்நினைத்திருப்

பதும் பிறர் தங்கள் ஊருக்கு ஜீவனத்திற்காக வருவதை வெறுப்பதுமே. எல்லா விஷயங்களிலும் தாங்களே பிறரைமிஞ்சியவர்கள் என்று இவர்கள் எண்ணுகிறார்கள். ஒரு சந்தர்ப்பத்தில் காலஞ்சென்ற கோபாலகிருஷ்ண கோகலே என்பவர் மொழிந்த வாக்கியமொன்றைப் பெயர்த்தெடுத்து இக்கொள்கைக்கு ஆதாரமாகச் சொல்லிவருகின்றனர். கோகலே சொன்ன வாக்கியம், "இன்று வங்க மாகாணம் எண்ணும் எண்ணங்களை நாளை பிறமாகாணங்கள் எண்ணும்" என்பது. இதிலிருந்து சகல விஷயங்களிலும் தாங்கள் தான் முதன்மை ஸ்தானம் வகிக்கத் தகுதியுள்ளவர்கள் என்று கோகலே ஒரு நற்சாக்ஷிப்பத்திரம் கொடுத்து விட்டதாகச் சொல்லிக் கொள்ளுகின்றனர். ஆனால் கோகலே குறிப்பிட்டது முற்றிலும் வேறு. இவ்வாக்கியம் அடங்கிய சொற்பொழிவை அவர்நிகழ்த்தியது இந்திய அரசியற் போரில் ஒரு நெருக்கடி எற்பட்டிருந்த சமயம். அது கர்ஜான் பிரபு வங்க நாட்டை இரு பிளவாகச் செய்திருந்த காலம். அப்பிளவிற்கு வங்க தேசம் முழுவதும் ஒரு பலத்த எதிர்ப்புக்கிளர்ச்சி ஏற்பட்டிருந்தது. அக்கிளர்ச்சிக்குத் தலைமை வகித்தவர் ஸுரேந்திரநாத் பானர்ஜி யென்பவர். இந்த சந்தர்ப்பத்தில் சர்க்காருக்கு ஓர் எச்சரிக்கை கூறுவதற்காக, "இன்று வங்க நாட்டில் ஏற்பட்டுள்ள கிளர்ச்சியும் உணர்ச்சியும் இந்தியாவின் ஏனைய பாகங்களைப் பாதிக்க அதிக நாட்கள் வேண்டியதில்லை" என்பதைக் குறிக்கவே மேற்கூறியவாக்கியத்தை கோகலே சொன்னார். பிற்காலத்தில் இதை இவர்கள் வேறு விதமாய்ப் பயன் படுத்திக் கொள்ளுவார்களென்று அவர் அறியார் போலும்!

தங்கள் ஊரில் பிறமாகாணத்தவர் வந்து குடியேறுவதை இவர்கள் வெறுக்கின்றனர். ஆனால் இவர்கள் மட்டும் இந்தியாவில் எல்லா விடங்களிலும் சர்வ சுதந்திரத்துடன் போய்த் தங்கலாமாம். வங்கநாட்டிற்கு அண்டைவீடுகள்போல அமைந்துள்ளஒரிஸ்ஸா, பீஹார், அஸ்ஸாம் என்னும் மூன்று மாகாணங்களிலும் இம்மாகாணத்தவர்போய் நிரம்பி யிருக்கின்றனர். பர்மாவிலுள்ள இந்தியர்களில் படிக்குப்பாதி இவர்கள் தானும். எனவே இவர்கள் ஊருக்குமட்டும் அந்நியர் வருவது தகாதென்று இவர்கள் கருதுவதில் கொஞ்சமும் நியாயமில்லை.

புத்திநுட்பத்திலும் இட்டவேலையைச் சரிவரச்செய்யும் ஆற்றலிலும் இந்நாட்டினர் நம்மவர்கட்கு மிகத்தாழ்ந்தவர்களென்றே சொல்லவேண்டும். இத்துடன் இவர்கள் மிகச்சோம்பேறிகள்கூட. 20, 30 வருஷங்கட்குமுன்பு சொற்ப படிப்புடன் இங்கு வந்த தென்னிந்தியர்கள் பலர் தற்போது உயர்ந்த சம்பளம் வாய்ந்த பொறுப்புள்ள பதவிகளிலிருப்பதே இதற்குப் போதிய சான்று.

(காரியதரிசி, தன்வந்தரி ஆச்ரமம் பழய கூடலூர் கீழ் வருமாறு எழுதுகிறார்.)

ஆரம்பக்ஷயம் ஆஸ்துமாவுக்கு ஓர் அரிய மருந்து.

(லங் க்யூர்)

(செய்யும் முறை:) கடுக்காய் 1பாகம், உள்ளிப்பூண்டு 2பாகம் திப்பிலி 4பாகம், ஆடாதுடை சார்விட்டுஅரைத்து 7 முறை புடம் போட்ட மான்கொம்பு பஸ்பம் 15பாகம் ஆகியவற்றை 8பாகம் ஆடாதுடை சாரால் கலந்து அரைக்கவும். இதை மிளகு அளவு காலையிலும் மாலையிலும் வெறும்வயிற்றில் தேனில் சாப்பிட்டால் சகல சுவாசகோச வியாதிகளை தீர்த்து உடலுக்கு ஒரு அரிய டானிக்காக விளங்கும்.

குறிப்பு: ஷை மருந்தைச் செய்ய இயலாதவர்கள் கீழ்க்கண்ட விலாசத்திலிருந்து தருவித்துக் கொள்ளலாம்.

1 மாத உபயோகத்திற்கான பாட்டில் ரூ. 5.

தன்வந்தரி ஆச்ரமம், பழய கூடலூர், தேரிழந்தூர் போஸ்ட் (தஞ்சை ஜில்லா)

அல்லது Indian Industrial Co, Ltd, Esplanade, Madras.

ஏழைகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்யப்படும்.

குழந்தைகளுக்கு ஆரோக்யம் அளிக்கிறது

ஐ.டி.எல்.

ஏதோ ஒருவித மாறுபாட்டுடன், சிடுமூஞ்சித்தனம்பண்ணி, எவ்வித காரணமும் வெளிப்படையாக இல்லாமல், குழந்தை ஓலமிட்டழுதால், அதற்கு ஜீரண சக்திக் கோளாற்றினல் ஏற்பட்ட தாங்கொணுத வலியே காரணமாக இருக்கும். அம்மாதிரி சந்தர்ப்பங்களில் கிரைப் சிரப் ஐ. டி. எல். உடனடியானசிகித்ஸை செய்வதோடு, மேற்கொண்டு விருத்தியாகக் கூடிய பெரும் இன்னல்களையும் வராமல் தடுக்கிறது. கைவசம் எப்போதும் ஒரு பாட்டிலே வைத்திருங்கள்.

கிரைப் சிரப்

இண்டஸ்டிரியல் & டெண்டல் லேபரட்டரி, மல்லேஸ்வரம், பெங்களூர்.

ஏஜண்டுகள்:– மெஸர்ஸ் பெஸ்டு அண்டு கோ., லிமிடெட்,
தபால் பெட்டி 63, மதராஸ்.

பொறுமை—பயின்ற முனிவர்

(ஸம்ஸ்கிருதக்கதை)

ய. மஹாலிங்க சாஸ்திரிகள், எம். ஏ., பி. எல்.,

கங்காதீரத்தில் ஒரு வனத்தில் முனிவர் ஒருவர் தவம் புரிந்துகொண்டிருந்தார். ஒரு சமயம் எதிர்ச்சையாக அரசன் ஒருவன் ஏகாந்தமாகத் தன் மஹிஷிகளுடன் ஜலக்கிரீடை, வனபோஜனம் முதலிய சந்தோஷங்களை அனுபவிக்கும் பொருட்டு அந்தப் பிரதேசத்துக்கு வந்துசேர்ந்தான். தன் அபீஷ்டப்படி லீலைகளைச் செய்துவிட்டு அரசன் இளைப்பார மரத்தடியில் படுத்துக்கொண்டு கொஞ்சநேரத்தில் நித்திரை போனான். அவன் பக்கத்திலிருந்த மஹிஷிகள் தூக்கம்வராமல் அவ்வனத்தின் அழகை நாலாபக்கமும் திரிந்து பார்க்கக் குதூஹலம் கொண்டு எழுந்து சென்றனர். அவ்வண்ணம் அவர்கள் சுற்றிவரும்போது ஸமாதி நிலையில் வீற்றிருந்த முனிவரைப்பார்த்து பிரமித்து நின்றுவிட்டார்கள். வெகு நேரமாகியும் அவர்களுக்கு அம்முனிவர் சந்நிதிவிட்டகலமனம் வரவில்லை. இதற்குள் அரசன் விழித்துக்கொண்டு பெண்களைப் பக்கத்தில் காணாததால் பரபரப்புற்று எழுந்து தேட ஆரம்பித்தான். அவன் கடைசியாக முனிவரை வியப்புடன் விழித்து நோக்கி அசையா வண்ணம் நிற்கும் தன் ஸ்திரீகளைப் பார்த்துக் கடுஞ்சினம் கொண்டு வாளை உருவி "எ கபடத் துறவியே! என் மஹிஷிகளை இப்படியே மதிமயக்கி இழுத்துக்கொண்டு போகப் பார்க்கிறாயா? எ துஷ்டா! உன்னை ஸம்ஹரித்துவிடுகிறேன் பார்" என்று ஒரே வீச்சாய் வீசினான். வீசிய வாளால் என்ன விளைந்ததென்று பார்க்க கூசினவன்போல் வெகு ஆத்திரத்துடன் தன் மஹிஷிகளை வெருட்டி அடித்துக் கொண்டு வாஹனமேறி விடுதிசென்றான்.

முனிவரோ தோள் அறுபட்டுத் தொங்கியும் ஸமாதி கலைக்கவில்லை. அப்போது அவர்முன் அம்பிகை பிரத்யக்ஷமாகி அவரை எழுப்பிக் கூறுவாள்— "பக்தா! நிரபராதியான உன்பால் அந்த மூர்க்கன் இழைத்த தீங்கிற்கு யாது தண்டனை விதிக்கின்றாய் நீ உரைப்பாயானால் உடனே அவனைச் சிக்ஷித்துவிடுகிறேன்" என்றாள். முனிவர் தேவியைப் பணிந்து கூறுவார்: "தாயே என் பொறுமை பயிர்ச்சிக்கு உதவிய உபகாரி அந்த அரசன். எவனுக்கும் ஒரு தீங்கும் இழைக்க வேண்டாம். எதையும் நான் பொறுப்பேன் என்று விளக்குவதற்கு அல்லவா அவன் இச்செய்கை செய்தான். இன்றே என் தவம் பலித்தது. நான் மனதை ஜெயித்தவனானேன். உனது பாதம் சேர உரியவனானேன். எனக்கருள்வாயாக" என்று சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்தார். அம்பிகை அவரைக் கருணையுடன் கடாக்ஷித்து விட்டு மறைந்தாள். முனிவர் முன்போல் யாதொரு அங்கஹீனமில்லாமல் தெய்வீகத் திருமேனியுடனும் முகமலர்ச்சியுடனும் எழுந்தார்.

'ஸம்ஸர்கஜாதோஷ குணபவந்தி'

ராமுவும்—தாத்தாவும்

(கே. எஸ். சூர்யநாராயண சர்மா)

ராமு வழக்கம்போல் தாத்தாவின் படுக்கையில் படுத்துக்கொண்டு கதை சொல்லும்படிக் கேட்டான்.

தாத்தா, "ராமு நீ தினமும் துஷ்டர்களுடன் சேரக்கூடாது. நல்ல பிள்ளைகளுடன் கூடிப் பள்ளிக்கூடம் போக வேண்டும். சிறுவயதிலேயே பழக்கங்களெல்லாம் புதுச்சட்டியில் கரிஏறுவது போல் சுலபமாய் ஏறுமாகையால் நல்ல பழக்கமும் நல்ல நடத்தையும் சிறுவயதிலேயே குழந்தைகளுக்கு ஏற்படும்படியாய் செய்துவைப்பது தாய் தந்தையர்கள் கடமை. அதைப்பற்றி உனக்கு ஒரு சிறு கதை சொல்கிறேன் கேள்" என்று தாத்தா கதையை ஆரம்பித்தார்.

ஒரு காட்டில் ஓர்நாள் ஒரு வேடன் காலையில் எழுந்து இன்றையதினம் சாப்பாட்டுக்கு என்ன செய்யலாம் என்று யோஜித்துக்கொண்டே ஒரு அடர்ந்த தோப்பை அடைந்தான். அங்கே ஏராளமான பக்ஷிகள் காலைவேளையாகையால் ஆனந்தமாய் கத்திக்கொண்டு தன் இனங்களோடு தம் பாஷையில் பேசிக்கொண்டும் தன் குஞ்சுகளிடம் கொஞ்சிக்கொண்டும் அதற்கு வேண்டிய புத்திமதிகளைச் சொல்லிக்கொடுத்துவிட்டு எல்லாப் பறவைகளும் தனக்கும் தன் குஞ்சுகளுக்கும் இரை தேடச் சென்றுவிட்டன. அந்த சமயம் மரத்தடியில் நின்றுகொண்டிருந்த வேடன் ஓர் மரத்திலேறி அதன் பொந்திலிருந்து இரக்கை முளைத்தும் முளைக்காமலுமிருக்கும் இரண்டு பச்சைக்கிளிக் குஞ்சுகளைப் பிடித்துக் கொண்டான். உடனே இரண்டையும் ஒரு கூட்டில் வைத்துக்கொண்டு அதிவேகமாய் ஸமீபத்திலுள்ள ஓர் நகாத்துக்குச்சென்றான். அந்தப்பட்டணத்து வீதியில் வசிக்கும் ஓர் பைராகி ஒன்றை விலைக்கு வாங்கிக் கொண்டான். மற்றொன்றைப் பல சீடர்களோடு கூடிய ஓர் ஸாது விலைக்கு வாங்கினார். பைராகியிடம் வளர்ந்து வரும்கிளி பைராகியைப்போல் வார்த்தை பழகிற்று. ஸாதுவிடம் வளர்ந்துவருவது ஸாதுவின் ஸ்வபாவப்படி நயமாய் வார்த்தை பழகிற்று. ஓர்நாள் இரவில் அந்த ஊர் அரசன் நகர சோதனைக்குப் புறப்பட்டு வரும்போது தற்செயலாய் பைராகி மடம் போனதும் வாசலில் கூண்டில் இருந்த கிளி அரசனைப்பார்த்து "அபே பஹாஞ்சோதா கௌநாஜீ அந்தர் சலாஹை" என்றது. அதாவது அடே பாஞ்சோத் உள்ளே போகாதே யாருடா அவன், உள்ளே போகாதே என்று சொன்ன கிளியின் வார்த்தையைக் கேட்டு மகாராஜா கோபத்துடன் புறப்பட்டு வீதியில் வரும்போது தற்செயலாய் ஸாதுவின் மடத்து வாசலை அடைந்தான். அந்த மடத்து வாசலிலுள்ள கூண்டிலிருக்கும் கிளியானது 'ஹே ராஜன் ஆகந்தவ்யம் உபவிசத, ஆசார்ய: அந்த: புங்க்தே க்ஷண மாத்ரம் உபவிசத பூபதி: பூஜ்ய: கில' மகாராஜனே வரவேண்டும் உட்காருங்கள். குரு உள்ளே போஜனம் செய்கிறார். தாங்கள் நிற்கக்கூடாது. மகாராஜா பூஜிக்கத்தக்கவரன்றோ' என்று சொல்லிற்று. இந்த வார்த்தையைக் கேட்ட மகாராஜா ஸந்தோஷப்பட்டார். உடனே தன்னுடன் கூடவந்த பிரதானியைக் கூப்பிட்டு முதலாவது பார்த்த பைராகியின் கிளியை சிரச்சேதம் செய்துவிடு. இந்தக் கிளிக்கு தகுந்த ஸன்மானம் செய் என்று உத்திரவு செய்தான். அதைக்கேட்ட இரண்டாவது கிளியானது அரசனைப்பார்த்துச் சொல்லிற்று "ஏ ராஜன் நான் வித்வான்களிடையே இருந்து பழகி வருகிறேன். எனக்கு அந்தப் பெரியவாளுடைய பழக்கம் பதிந்திருக்கிறது. அந்தக் கிளியானது மாம்ஸ போஜிகளுடன் இருந்து பழகி வருவதால் அவர்கள் தாமஸ குணம்

ஸ்வபாவம் எல்லாம் அந்தக்கிளிக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆதலால் தாங்கள், பழகிவரும் இடம் மனுஷ்யாள் இவைகளைப் பொருத்ததுதான் குணம், என்பதை தயவுசெய்து அறிய வேண்டிக் கொள்கிறேன். எங்கள் பேரில் குற்றம் சொல்வதில் பயனில்லை" என்றுகூறிற்று. ஆதலால் குழந்தே ராமு நீயும் கெட்ட பிள்ளைகளுடன் சேர்ந்து பழகினல் கெட்ட குணங்களே உனக்குப்படியும். அதை விலக்கி நல்ல பிள்ளைகளோடும் பெரியோர்களிடமும் பழகிவந்தால் உலகம் புகழப் பெருமையடையலாம். அதிலும் சிறுபிள்ளைகளை நல்லோர்களோடு பழகும்படியும் நல்ல பேச்சுக்களையே சொல்லி வரும்படியும், சிறுவர்கள் காது பட வீட்டில் கெட்ட வார்த்தைகளை மற்றவர்கள் பேசாதிருக்கவும் செய்ய வேண்டியது குடும்பத்தின் தலைவனுடைய கடமை என்று தன் பேரன் ராமுவுக்குத் தாத்தாவான பிர்மஸ்ரீ மஹாமஹோபாத்யாயர் சொல்லி முடித்தார். ஆதலால் இதைப் படிக்கும் சிறுவர் சிறுமிகளே! நீங்கள் கெட்ட பிள்ளைகளோடு சிநேகம் செய்யாமல் நல்ல பிள்ளைகளோடு பழகி நற்செய்கைகளைச் செய்து வரப் பழகவேண்டும் என்பது இக் கதையின் கருத்து.

தேன் ஓர் ஆகாரம்

சாதாரணமாக தினசரி ஒவ்வொரு வீடுகளிலும் தேனை உபயோகித்து வருகிருர்கள். பழங்கள் முதலியவைகளைப் போல் சில சமயங்களில்தான் கிடைக்கும் என்றில்லாமல் தேன் வருஷம் பூராவும் எச்சமயத்திலும் கிடைக்கக் கூடியது. பல இனிப்புப் பதார்த்தங்களில் மற்ற வஸ்துக்களின் சேர்க்கை ஏதுமின்றி சுயமாக அப்படியே உபயோகிக்கப்படுவது தேன் ஒன்றுதான்.

தேனில் இருவகை யுண்டு. ஒன்று சாதாரண சிகப்பு நிறமாகவுள்ளது; மற்றொன்று கரும் சிகப்பு நிறமுள்ளது. சாதாரணமானது கொஞ்சம் இளகலாகவிருக்கும்; கரும் சிகப்பு நிறமுள்ளது சற்று இறுகலாகவிருக்கும். (இதைத் தான் பெரியோர் கொம்புத்தேன் என்கிருர்கள்). இவற்றுள்ள பின்சொல்லப்பட்டதே சரீரத்திற்கு வேண்டிய ஆகாரப்பொருள் அதிகம் நிறைந்து வாசனையுடன் கூடியிருப்பது. இது வெகுவாக காடுகளிலும் மலைகளிலும் தான் அகப்படும்.

தேனில் முக்கியமாக ஆல்கலைன் ஆஷ் என்று சொல்லப்படும் ஆகாரங்களின் வகுப்பைச் சேர்ந்த கார்போஹைட்ரேட், தித்திப்பு பெரும்பாலும் உள்ளது. அதாவது மனித தேகத்திற்கு பலத்தைக் கொடுப்பவைகளில் தேன் ஓர் முக்கிய பதார்த்தம், என்று ஒட்டாவா மத்திய ஆராய்ச்சிப்பண்ணையில் தேனீப் பிரிவைச்சேர்ந்த W. A. ஃவுபன் என்பவர் கூறியுள்ளார்.

பல ஆகாரப் பொருள்களில் உள்ள இனிப்பு (சக்கரைச்சத்து) நமது சரீரத்தில் கொஞ்சநேரம் தங்கிய பிறகே தேகத்தில் உற்பத்தியாகும் பாங்கிரியாஸ் என்று சொல்லப்படும் ஓர்வகை நீரினல் ஜீர்ணிக்கப்பட்டு உடலில் கலக்கிறது. ஆனல் தேனிலுள்ள இனிப்பு சற்றும் தாமதமின்றி சரீரத்தில் உடனே சேர்ந்துவிடுகிறது.

இந்த இனிப்பைத்தவிர தேனில் இன்னும் தாதுப்பொருள்கள், இரும்பு, செம்பு, மெக்னீஷியம், கால்ஷியம், பொட்டாஷியம் என்ற பதார்த்தங்களும் இருக்கின்றன. மேலும் பன்னிரண்டு வகை திராவகங்களும், நிறத்தைக்கொடுக்கும் பதார்த்தங்களும், வெலடைல் எண்ணைகளும், இன்னும் கண்டுபிடிக்கப்படாத சரீரத்திற்கு புஷ்டியைத்தரும் பல பதார்த்தங்களும் இருக்கின்றன. ஆகையால் பிஸ்கோத்து, பழங்கள், டீ, காப்பி இவைகளைவிடத் தேன் ஓர் சிறந்த ஆகாரமே.

இண்டியன் பார்மிங், டிசம்பர் 42.

ஆஷலதாவின் அழகான சருமத்தின் இரகசியம் இதுதான்

''என் சருமத்தைப்பற்றி பிரத்தியேக கவலை நான் எடுத்துக்கொள்கிறேன்'', ''ஆம்'' என்று இந்த கவர்ச்சியுள்ள சினிமா நடி சொல்லுகிறார். மேலும் அவர் சொல்லுவதாவது: லக்ஸ் டாய்லெட் சோபினால் என் சருமத்தின் அழகை பாதுகாக்கிறேன். இந்த சோப் சருமத்தை சுத்தமாகவும், வழவழப்பாகவும், மாசு மருவன்னியில் வைத்துக்கொள்வதில் சிறந்தது. அநேக ஸ்திரீகள் தங்கள் சருமத்தை அழகாகவும், இளமையாகவும், வைத்திருப்பது கடினம் என்று நினைக்கிறார்கள். ஆனால் இந்த நறுமணமுள்ள வெண்ணிற சோப்பினால் இது மிகவும் எளிது''.

லக்ஸ் டாய்லட் ஸோப்

LTS. 78A-172 TM LEVER BROTHERS (INDIA) LIMITED

உஸ்தாத் மஜ்லிஸ் கான்

எஸ். குஞ்சிதபாம், ஆனைதாண்டவபுரம்.

மனிதவாழ்க்கையின் பரம உத்தேசம் என்ன? உலகம் என்று தோன்றியதோ அன்றுமுதல் இன்றுவரை பலபல மேதாவிகள் பலபல விதமான பதில்களை ஆராய்ந்து கூறியிருக்கிறார்கள். ஆனால் ஒருபதிலும் முடிவானபதிலாக இல்லை. இருந்திருந்தால் வேதாந்த தர்சன சாஸ்திரக்காரர்கள் எல்லையில்லாமல் வாதப்பிரதிவாதங்கள் செய்திருக்க மாட்டார்கள். இருண்ட அறையில், அங்கில்லாத, ஒரு கருப்புப் பூனையைத் தேடிப்பிடிக்க முயலும் ஒரு குருடனுக்குச் சமமானவர்கள் இவர்கள். மனித வாழ்க்கையின் உத்தேசம் என்ன என்று கண்டுபிடிக்க முயல்பவர்கள், என்று சாதாரண மனிதர்கள் பரிகாசம் செய்யவும் மாட்டார்கள். இந்த அஞ்ஞாதமான உத்தேசத்தைக்கண்டுபிடிப்பதில் எவ்வளவு மதபேதங்கள் இருக்கின்றனவோ, அவ்வளவு மாறுபட்ட அபிப்ராயங்கள் ‘இங்கே’ “இப்பொழுது” உத்தேசம் என்ன என்பதைப்பற்றியும் இருக்கின்றன. சில உதா உதாரணங்களைப் பார்ப்போம்: ஒரு ஏழை குடும்பஸ்தனின் உத்தேசம் தன் குடும்பத்திற்கு அன்ன வஸ்திரம் தேடிக் கொடுப்பது. ஒரு டாக்டரின் உத்தேசம் சரீர அசௌகரியமடைந்திருப்பவர்களுக்கு ஆரோக்கியம் அளிப்பது (அல்லது அவர்களுடைய அசௌகரியத்தை அதிகமாகச்செய்து கடைசியில் பயங்கரமான பில்களை அளிப்பது) ஒரு யுவதியின் உத்தேசம் நல்ல கணவனுக்கு வாழ்க்கைப்பட்டு நிறையக் குழந்தைகளைப் பெற்றுக்கொண்டு ஸம்ஸார ஸாகரத்தில் தத்தளிப்பது. ஒரு முதலாளியின் உத்தேசம் நல்ல விலைக்கு ஏறக்கூடிய ஷேர்களை முன்கூட்டியே ஊகித்து குறைந்த விலைக்கு வாங்குவது. ஒரு குடியானவனின் உத்தேசம் உழவுமாட்டுக்கும் தனக்கும் வித்தியாசம் தெரியாமல் உழுது சாகுபடி செய்து நிலச்சொந்தக்காரருக்குக் கொட்டி அளந்துவிட்டு தான் அரைவயிற்றுக்கஞ்சி குடித்துக்கொண்டு எலும்பும் தோலுமாகப்பிராணனை உடலில் பிடித்து வைத்துக்கொண்டிருக்க வேண்டியது. என்னுடைய உத்தேசம் பேனாவில் மசியை நிரப்பி நிரப்பிக்கொண்டு காகிதத்தில் கிறுக்கிக்கொண்டேயிருக்கவேண்டியது. போதும் உதாரணங்கள்!

ராவ்சாஹிபாக இருந்த என் நண்பர் ஒருவருடைய உத்தேசம் ‘நைட்’ ஆக ஆகவேண்டியது; ‘ஸர்’ பட்டம் அடைந்துவிட்டால் அவருடைய ஜன்மம் சாபல்யமடைந்துவிடும்! அவருக்கு வேறு ஒரு குறையும் இல்லை; வெறும் ‘மிஸ்டர்’ அல்லது ‘ஸ்ரீ’ (அப்பொழுதுமகா-ா-ா-ஸ்ரீ) என்றுமட்டும் பிறர் தன் பெயருக்கு முன்னால் போடுவது அவருக்கு ஒரு பெரிய குறையாகத் தோன்றியது. தன் குறையை நிவர்த்திக்க எவ்வளவோ சிரமப்பட்டார். ராவ்ஸாஹிப் பட்டம் கிடைத்துவிட்டது கொஞ்சம் திருப்தி ஏற்பட்டது. வெற்றியின் முதற்படியில் ஏறியதும் உற்சாகம் பன்மடங்கு பெருகியது. எந்தெந்த தேவதைகளுக்கு எப்படி எப்படி பிரீதி செய்விக்கவேண்டுமோ அக்காரியங்களில் தயங்காமல் கண்ணுங்கருத்துமாக ஈடுபட்டார். தேவதைகளின் அனுக்கிரஹம் சித்தித்தது. வாழ்க்கையின் உத்தேசத்தை யடைய இன்னொருபடி வெற்றி! ராவ்ஸாஹிப் ராவ்பகதூர் ஆனதைப் பத்திரிகையில் பார்த்ததும் ஒரு நீண்ட பெருமூச்சு விட்டேன். அவர் படும் சிரமமெல்லாம் எனக்கல்லவா தெரியும்!

நண்பர்கள், ராவ்பகதூருக்கு ஒரு விருந்து அளிக்க ஏற்பாடு செய்தனர். இதில் ஒரு ரகஸ்யம் ஒளிந்திருக்கிறது.

ராவ்பகதூர் தாம் பட்டம்பெற்றதைப் பாராட்டிக்கொள்ள நண்பர்கள் மூலம் தமக்குத்தாமே விருந்து அளித்துக் கொண்டார் என்பதுதான் உண்மை. ஏனெனில், புதிய எழுத்தாளர்களின் கதைகளையோ, கட்டுரைகளையோ எனக்கு வேண்டாம் எனக்கு வேண்டாம் என்று பத்திரிகாசிரியர்கள் உதறித்தள்ளுவதுபோல, எல்லாரும் (அதாவது பொதுஜன ஊழியர்கள் அல்லது தலைவர்கள்) உதறித்தள்ளும் மதிப்பில்லாத இந்தப் பட்டங்களைப் பெற்றவர்களைக் கௌரவிக்கத் தாமாக (அதாவது தம்முடைய கைப்பணத்தைச் செலவழித்துக்கொண்டு) ஒருவரும் முன்வரமாட்டார்கள். இது எப்படியாவது இருக்கட்டும்; விருந்துக்காக எனக்கு ஒரு அழைப்புக் கடிதம் வந்தது. அந்த விருந்தின் நிகழ்ச்சிக்குறிப்பில் 'கனகலதாபாய்—ஹிந்துஸ்தானி ஸங்கீதம்' என்று காணப்பட்டது.

தமிழ் ஸங்கீதம், தெலுங்கு ஸங்கீதம் என்றெல்லாம் ஸங்கீதத்திற்குப் பாஷாவாரியாகப் பிரதிநிதித்வம் அளிக்கப்பட்டு கிளர்ச்சி நடந்துகொண்டிருக்கும் இந்த நாளில் ஹிந்துஸ்தானி ஸங்கீதம் வேறு இங்கு அமுல் செய்ய வந்துவிட்டதா என்று நினைத்துக்கொண்டேன். இந்தப் பக்கத்துக்குவரும் ஹிந்துஸ்தானி ஸங்கீத வித்வான்கள் சிலருடைய கச்சேரிகளை நான் கேட்டிருக்கிறேன். அந்தக்கச்சேரிகளைப்பற்றி நான் எழுதுவது ஹிந்துஸ்தானி ஸங்கீதத்தைப்பற்றியே சமஷ்டியாக எழுதுவதாக ஆக முடியாதேயாயினும் நான் அவைகளைப்பற்றி எழுதாமல் இருப்பதே நல்லது என்று தோன்றுகிறது! ஆனால், ராவ்பகதூரின் விருந்துக் கச்சேரிக்கு அப்படி என்ன ரொம்ப மட்டரகமான பேர்வழியையா அழைத்திருப்பார்கள் என்றும் நான் சிந்திக்காமல் இல்லை. ஒருவேளை ரொம்பவும் நல்ல பாடகியாக இருந்துவிட்டால்! எல்லாவற்றிற்கும் முன்ஜாக்கிரதையாக ஒரு டாக்டர் நண்பரையும் என்னுடன் அழைத்துக்கொண்டு ராவ்பகதூரின் விருந்துக்குச் சென்றேன். ஏககாலத்தில் சேர்ந்தாற்போல உயர்ந்த விருந்தையும் மேலான செவிக்குணவையும் உட்கொண்டால் அஜீர்ண முண்டாகிவிடாதா?

விருந்து முடிந்தது. நான் விருந்தைப் பற்றி அதிகமெழுதி உங்களைத் தவிக்கச் செய்யப்போவதில்லை. விதவிதமான அறுசுவைப் பண்டங்களைப் பற்றி நான் ஸ்வாரஸ்யமாக விவரித்தால் உங்கள் நாவில் ஜலம் ஊறிப் பசிஉண்டாகும். உடனே பத்திரிகையை மூடி வைத்துவிட்டு (நீங்கள் புருஷர்களாய் கல்யாணமானவர்களாய் இருந்தால்) சமையலறையில் மனைவி என்ன வைத்திருக்கிறாள் என்று பாத்திரங்களை உருட்டிப் பார்க்கச் சென்றுவிடுவீர்கள்; மேலே படிக்கமாட்டீர்கள். மேலும் சிற்சில சமயங்களில், எதிர்பாராத சந்தர்ப்பத்தில், புருஷர்கள் சமையலறையில் வந்து 'லூட்டிங்' செய்வது, ஸ்திரீகளுக்குக் கோபமுண்டாகும்படி (கடவுள் அவ்விதம் நேராமல் காப்பாராக!) செய்துவிடும். ஆகையால் அந்தப் பாவத்திற்கு அஞ்சி விருந்தைப்பற்றி எழுதாமல் விடுகிறேன். நீங்கள் ஸ்திரீகளாய் இருந்தால் உங்களுக்கு நான் அந்த விருந்தில் பரிமாறப்பட்டவைகளைப்பற்றி ஒன்றும் சொல்லவேண்டாம். தாங்கள் செய்யும் எந்தப் பதார்த்தத்தின் ருசிக்கும் அவை ஈடாகவில்லை என்று கூறுவதே போதும். என்னுடைய தோல்வியை ஒப்புக்கொள்கிறேன்!

விருந்தின் பூர்வாங்க ஸம்ஸ்காரங்களெல்லாம் ஆனபிறகு கடைசியில் கச்சேரி. கச்சேரியாவதுகச்சேரி! ஆஹா! கனகலதாபாய் ஒரு திலக் காம்போதியிலேயே பம்பரம்மாதிரி என்னைத் தலை சுற்றச் செய்துவிட்டாள். ச்யாம கல்யாணி ராக ஆலாபனையின் மதுரமான த்வனி இன்னும் என் காதிலே எதிரொலித்துக்கொண்டிருக்கிறது. அவள் மால்கோஷ் ராகம் பாடினபோது ஸங்கீதத்தில் இவ்வளவு ராக ராகினிகள் எதற்காக, இந்த ஒரு ராகமே போதுமே யுக யுகாந்தமாக இதையே அலுப்பு சலிப்பில்லாமல் கேட்டுக்கொண்டிருக்கலாமே என்று தோன்றியது. பீமபலஸ்ரீ ராகமோ எனக்கு ஒன்றும் தோன்றுபடியே செய்துவிட்டது. என்னை நான் மறந்தே இன்பமடைந்தேன். என்ன 'அந்தர்' என்ன 'தான்'! அடடா, இந்துஸ்தானி பாஷையே தெரியாத நண்பர்களும் எவ்வளவு ஆனந்தமாக லயித்திருக்கிறார்கள்! ஸங்கீதத்திற்கு பாஷை என்ற வரம்பு உண்டா? உலகமுழுதும் பரவும் ஒரே பாஷை என்று ஸங்கீதத்தைச் சொல்வதில் என்ன தப்பு? இதையெல்லாம் யோசனைசெய்யக்கூட அப்போது நேரமில்லை. ஆனல் டாக்டர் நண்பர் இடையிடையே மெதுவான குரலில் இந்தப் பாட்டுக்கு என்னஸார் அர்த்தம்? என்று கேட்டபோது ஒவ்வொரு பாட்டும் முடிந்த பிறகு சொல்லிவிட்டுச் சற்று சிந்தித்தேன். கொஞ்சம் கொஞ்சம் ஹிந்துஸ்தானி தெரிந்திருப்பதனல் அவர்களைவிட அதிகம் நான் அநுபவிக்கிறேன். 'ஜன-ஹித ராம தரத் சரீர....' என்ற மஞ்சுகேசியின் ஸாஹித்யத்தையுமல்லவா நான் அநுபவிக்கிறேன், ஸங்கீதத்துடன்! தனியாகப் படிக்கும்போது இல்லாத பாவம் இசையுடன் சேரும்போது நிச்சயம் இருக்கத்தான் செய்கிறது. ஆக்ஷேபணையில்லை. எனக்கு ஹிந்துஸ்தானி ஸங்கீதத்தில் அபாரபிரேமைதான்; ராகங்களையும் நன்குஉணர்ந்துகொள்கிறேன்; கனகலதாவின் குரலும் ஒப்புவமை இன்றியிருக்கிறது. ஆயினும் ....அபூர்ணமாக, என்னவோ குறைவாகத்தான் இருக்கிறது. ஆம்! நான் ஹிந்துஸ்தானிக்காரன் இல்லை. இந்தக் கஜல்களும், தோம்ரிகளும் ஹிந்துஸ்தானிக்காரர்களுடைய மனதில் என்ன உணர்ச்சியை எழுப்புமோ அதைவிடக் குறைவாகத்தான் என்மனதில் எழுப்பிக்கொண்டிருக்கின்றன. இல்லாவிட்டால் இந்த அபூர்ணம், முழுக்கவும் இல்லை என்ற திருப்திக் குறைவு ஏன் உண்டாகிறது? ஐந்துவருஷகாலமாக ரேடியோவில் ஹிந்துஸ்தானி ஸங்கீதம் கேட்டுக் கேட்டு என் காதுகள் பண்பட்டிருந்தபோதிலும், நான் ஹிந்துஸ்தானி ஸங்கீதத்தை ஹிந்துஸ்தானிக்காரர்கள் அநுபவிக்கக்கூடிய விதம் பரிபூர்ணமாக அநுபவிக்கத்தான் இல்லை என்றே எனக்குத் தோன்றிக் கொண்டிருக்கிறது. அவர்கள் எப்படி அநுபவிக்கிறார்கள் என்பதை நாம் கண்டுபிடிக்க முடியாது. ஆனல் ஒரு தமிழ் பாட்டு என் மனதில் உண்டாக்கும் உணர்ச்சியைவிடக்குறைவாகவேதான் ஒரு ஹிந்துஸ்தானிபாட்டு உண்டாக்குகிறது என்று எனக்குத் தெரிகிறதனல் தான் நான் இந்த அபிப்பிராயத்தை யடைகிறேன்.

அறிக்கை.

பாரதமணியில் நவீனத்திற்கும், கதைக்கும் கட்டுரைக்கும் அதிக இடமில்லை. அதுவும் பேப்பர்ப் பஞ்சகாலத்தில் சுவானுபவத்தையொட்டி எழுதப்படும் விஷயங்களுக்கும், கிராம முன்னேற்ற நிர்மாணத்திட்டத்திற்கும், குழந்தைகளுக்கு நீதியையும், செயலையும், கல்வியையும், சுறுசுறுப்பையும் புகட்டும் புராணக் கதைகளுக்கும், சரித்திரக் கட்டுரைகளுக்கும் வரவேற்பு அளிக்கப்படும்.

ஆசிரியர்.

50 வருஷ அனுபவத்தில் உள்ளது. பிரபல டாக்டர்களால் உபயோகிக்கப்பட்டு நற்சாட்சிப் பத்திரம் பெற்றது.

உங்கள் தோல் நரம்பு, எலும்பு, தசைகளில் ஏற்படும்

சகல நோய்களுக்கும் இதை உபயோகியுங்கள்.

எல்லா ஊர் ஷாப், மளிகை, இங்கிலீஷ், நாட்டு மருந்து கம்பெனிகளில் கிடைக்கும்.

கோடைகால ஆரோக்ய ஸ்தலங்கள்

—————]O[—————

தரங்கம்பாடி, திருக்கடையூர், திருவெண்காடு, (சுவேதாரண்யம்), காவேரிப்பூம்பட்டினம்.

ஓர் முறை விஜயம் செய்து குளிர்ச்சியும், சாந்தமுமுள்ள கடல்க்காற்றை அனுபவித்து ஆனந்தியுங்கள்.

இப்படியெல்லாம் நான் பாட்டில் பரவசமடைந்திருந்தபோதிலும் மெதுவாகச் சமாளித்துக்கொண்டு கனகலதாபாயை உற்றுநோக்கினேன். அவள் ரொம்ப அழகுதான் என்பதில் சந்தேகமில்லை. என்னுடைய கதையின் பாத்திரம் என்பதற்காக நான் அவளைப்பற்றி இப்படிப் பிரமாதமாகப் புகழ்ந்து கூறவில்லை. நான் கையில் காமிரா எடுத்துக்கொண்டு போகாததனால் அவளை ஒரு போட்டோ எடுத்து வைத்துக்கொள்ள முடியவில்லை. அப்படி ஒரு போட்டோ எடுத்துக்கொண்டு வந்திருந்தால் அதையும் இந்தப் பத்திரிகையிலே பிரசுரித்திருக்கலாம். அப்பொழுது நீங்கள் நான் சொல்வது வாஸ்தவம், மிகைப்படகூறவில்லை என்பதை ஒப்புக்கொள்வீர்கள். பரவாயில்லை, அவள் படம் இல்லாததனால் ஒன்றும் குடிமுழிகிப்போய்விடவில்லை. நான் சொல்லுவதை நம்பிவிடுங்கள். அவளுக்கு வயதும் அதிகமில்லை. பதினேழு, பதினெட்டு, இருக்கலாம். சரி, சிருங்கார ரஸத்தில் இறங்கிவிட்டேனென்று எண்ணிவிடாதீர்கள். அதெல்லாம் காதல், சாதல், வெண்ணிலா உத்யானம் ஒன்றும் வரப்போவதில்லை. பயப்படாதீர்கள்! சந்திரனுக்கு ஒப்பாக ஸ்திரீகளுடைய முகத்தை (எவ்வளவு பவுடர், ஸ்னோ முதலியவைகளும் லவலேசமும் லக்ஷணமாகச் செய்யமுடியாத முகத்தை அல்ல, இயற்கையான அழகுள்ள முகத்தை) வர்ணிக்கிறார்கள் கவிகள். சந்திரனில் களங்கம் உண்டு என்பது எல்லோருக்கும் தெரிந்தவிஷயம். கனகலதாவின் முகத்திலும் ஒரு களங்கம் இருந்தது. நெற்றியின் ஒரு புறத்தில் சந்திரப்பிறைபோல ஒரு வடு இருந்தது. அவள் பெரிய தம்புருவைத் தாங்கி ஒரு காலின்மேல் இன்னொரு காலை மடித்து, இடையை நெளித்து உடலை நிமிர்த்தி உட்கார்ந்து, ஒய்யாரமாகச் சுருதியிழைத்துக்கொண்டு பாடிக்கொண்டிருந்தாள். அவளுக்கு நடுப்பக்கத்தில் ஸாரங்கி வாசித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தான் ஒரு கிழவன். இன்னொருபுறம் தபேலாவுடன் முஷ்டியுத்தம் செய்துகொண்டிருந்தான் ஒரு ஆஜானுபாஹுவானதடியன்: ஒவ்வொரு பாட்டு முடிந்ததும் அந்த பீமசேனன் இடிமுழக்கம்போல கனைத்துக்கொண்டு வெள்ளிச் சுத்தியினால் தபேலாவின் ஓரத்தில் 'டிண், டிண்' 'டக், டக்' என்று தட்டிச் சுருதி சேர்த்தான்.

ஸாரங்கி வாசித்த கிழவன் என்னை அடிக்கடி உற்று நோக்கிக்கொண்டிருந்தான். இவ்வளவு பேர்களுக்கும் மத்தியில் கதர் பண்டியும் வெள்ளைக் குல்லாயும் அணிந்த எனது தோற்றம் தனியாக எடுத்துக்காட்டியதா, என்ன விஷயம்? நான் அவனைப் பார்த்தபோதெல்லாம் அவன் என்னைப் பாராதவன்போல கண்ணைத் திருப்பிக்கொண்டான். ஏன்? அவனை நான் இதற்கு முன் எங்கேயாவது பார்த்திருக்கிறேனா? இந்த அடர்ந்த பின்தி மீசை, முறுக்கி முறுக்கி வைக்கோல் பிரியைப்போலச் சுற்றப்பட்ட இந்தப் பெரிய முண்டாசு, முரட்டுக் கண்கள், கூரிய முகவாய், ஒட்டிய கன்னங்கள், நீண்ட மூக்கு இவைகளை நான் எங்கேயோ பார்த்திருப்பதுபோல ஞாபகம் வருகிறதே! அந்தப்பெண்ணையும் பார்த்த ஞாபகம் கொஞ்சம் கொஞ்சம் இருக்கிறதே! ஆனால் எங்கே? எப்போது? எங்கேயோ? எப்போதோ? அவர்கள் ஊரூராகச் சுற்றுகிறவர்கள்தானே? நானும் இன்று சென்னை, நினைத்துக்கொண்டால் நாளைக்கு பம்பாய், அடுத்தநாள் அஹமதாபாத், அங்கிருந்து அலகாபாத், வருகிற வழியில் ஹைதராபாத் என்று ஊர்சுற்றுகிறவன் தானே? அவன் தொழில் அது, என் தொழிலும் அது. எங்கே பார்த்தேனோ, அது என்ன ஊரோ, எப்பொழுதோ? ஏதாவது ஒரு ஊரில் ஒரே ஹோட்டலில் அவனும் நானும் தங்கியிருந்திருக்கலாம். இல்லை! என்னவோ ரொம்பப் பழகியவன் மாதிரித் தோன்றுகிறானே! அவனைப் பார்க்கப் பார்க்க என் மனம் துருதுருவென்றிருந்தது. ஒரு பாட்டுக்கும் இன்னொரு பாட்டுக்கும் நடுவேயுள்ள இடைநேரத்தில் நான் என் மூளையைச் சிரமப்படுத்திக்கொண்டிருந்தேன். "என்



தன் குடும்பத்தில் சம்பாதிக்கிறவர் **இந்த கனவான் ஒருவரே.** அவருக்கு நீண்ட ஆயுளும், நல்ல அதிருஷ்டமும் வரும்படி நாம் பிரார்த்திக்கிறோம். **ஆனால் காலம் மிகவும் நிச்சயமில்லாததாய் இருக்கிறது;** அதனால் அவருக்கு ஏதாவது கெடுதல் நேர்ந்தால், அவருடைய குடும்பத்தை யார் சம்ரக்ஷிப்பது?

“ நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் ” தான்

அதில் அவர் இன்ஷ்யூர் செய்திருந்தால்—

நேஷனல் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி, லிமிடெட்,

7, கவுன்ஸில் ஹௌஸ் தெரு, கல்கத்தா.

ஸப் ஆபீஸ் :	மதருஸ் பிராஞ்சு :	ஸப் ஆபீஸ் :
171, புதுத்தெரு, மதுரை.	58, கோபதிநாராயணஸ்வாமி செட்டி ரோடு, தியாகராயநகர், மதருஸ்.	5, கெம்பகோட ரோடு, பெங்களூர்.

ஸார் உடம்புக்கு என்ன? யோசனை செய்கிறீர்களே" என்று டாக்டர் கேட்டார். "ஒன்றுமில்லை டாக்டர், உங்களுக்கு பீஸ்கொடுக்கவேண்டிய நிலைமைக்கு நான் இன்னும் வரவில்லை" என்று சொன்னேன். அந்தப்பொல்லாத மனிதர் (உஹும்! சும்மா விளையாட்டுக்குச் சொல்கிறேன், அவர் ரொம்ப தங்கமான குணமுள்ளவர்.) 'அப்படியா சங்கதி!' என்று என் கையைப்பிடித்து ஒரு அமுக்கு அமுக்கினார். அவர் என்ன நினைத்துக்கொண்டாரோ, என்னவோ "கண்ணை மூடிக்கொண்டு பாட்டை மட்டும் கேளுங்கள். அதிகமாகக் கண்ணை உபயோகித்து மனதைக் கெடுத்துக்கொள்ளவேண்டாம்". என்று கூறிச் சிரித்தார்.

கச்சேரி முடிந்தது. அந்த விருந்து நிகழ்ச்சிகள் ஸர்வேச்வரனுடைய கிருபா கடாக்ஷத்தினால் யாதொரு விக்கினமுமின்றி நிறைவேறின. நண்பர்கள் எழுந்து செல்லத்தயாராயினர். ஸாரங்கி வாசித்த கிழவன் என்னைப் பார்த்து 'நொமொஷ்கார்' என்று ஒரு கும்பிடு போட்டான். நான் அவனைக் கண்ணிமையசையாது உற்று நோக்கினேன். அவன் ஸாரங்கியைக் கீழேவைத்துவிட்டு என்னருகில்வந்து "ஜீ! என்னைத் தெரிகிறதா!" என்று கேட்டான். யார் அவன்?

—தொடரும்.

ஓர் வேண்டுகோள்.

சென்ற மார்ச்மீ 12உ யன்று டாக்டர் ஸ்ரீ D. K. சந்திரசேகரய்யர் தலைமையில் நடைபெற்ற ஒரு மீட்டிங்கின் தீர்மானப்படி, முனிஸிபல் ஹைஸ்கூலில் நீண்டகாலம் ஸம்ஸ்கிருத பண்டிதராயிருந்து, தற்காலம் ஓய்வடைந்திருக்கிறவரும், சுமார் சென்ற பத்து வருஷகாலமாக வேதாந்த பாஷ்யப்ரவசனம் செய்து வருகிறவருமான **பிர்ம்மஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள்** அவர்களுக்கு நாளது சித்திரை மீ 22உ வரும் அவருடைய **ஷஷ்டியப்தபூர்த்தி** யன்று ஒரு **பணமுடிப்பு** அளிக்கப்படும். அதற்கு ஆஸ்திக கனவான்களும், சாஸ்திரிகள் அவர்களது சிஷ்யர்களும், நண்பர்களும், அடியிற்கண்ட விலாஸத்திற்குத் தங்களாலியன்ற பண உதவியளிக்கும்படிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

A. ஸப்தரிஷி அய்யர், 24, மகாதானத்தெரு, மாயவரம்.

WANTED.

One Secondary grade and One Higher grade trained teacher. Apply to:

K. S. Venkataramani,
Kaveripoompatnam,
(Tanjore Dt.,)

WANTED.

One B. A., (Honours) Economics, to work on a rural survey. Knowledge of short-hand and typing will be helpful.

Apply to, stating terms:
K. S. Venkataramani,
Kaveripoompatnam,
(Tanjore Dt.,)

Edited & Published by K. S. Venkataramani at No 43 Mahadana Street Mayavaram, printed by V. Ramamurthi B. A., at the Mirasdar's Welfare Press 29 Mahadana Street, Mayavaram.